ராவிடநாடு

9–11–59 | வார வெளியீடு | விலை 16 காசு

# விழித்தெழு தமிழா!

—[ வெண்ணெய் வேலன் ]—

எழுவாய் தமிழ்மகனே விழித்
    தெழுவாய் துயில் தவிர்த்தே
பழு தேயிலாத் தமிழைச் சில
    பயனறியார் குலைத்தே
முழுதுங் கெடுத் ததைப்போக்கிட
    முனைகின்றனர் மிகவே
தொழுதே பணிந்துயிர் வாழ்ந்திடும்
    தொடர் போக்கிட எழுவாய்!

சிலைபோலுள குணம்போக் கியுன்
    சிரம் தூக்கிடு தமிழா
மலையே யெதிர்வரினும் இனி
    மனம் மாறுதல் தகுமா?
நிலையோ உனதுயிர் வாழ்க்கையும்
    நிலமீதினில் நெடு நாள்
விலைபோகுது மானம் இங்கே
    விழித்தே யெழு தமிழா!

வயிரம் உனதுள்ளம், உடல்
    வரையே யிதை மறவேல்
துயரம்இனி எதிலும் இலைத்
    துடித்தே யெழு தமிழா!
உயிர்தான் உனதில்லை யெனும்
    உண்மைப் பொரு ளறிந்தே
புயலேஎறென தமிழ் காத்திட
    புகுவாய் களம் விரைந்தே!

படையோடங்கு புகுந்தே யுள
    பகையோர் சிரம் விழவே
நடைபோடு நீ அடலே றென
    நமக்கே வெற்றி முழுதே
தடையேயிலை உடனே தமிழ்
    தயவால் பகை எதிர்த்தே
அடைவோம் தனித் திருநாட்டினை
    அயரேல் விழித் தெழுவாய்!




'தெற்கு' 'தெற்கு' என்ற குரல் திரும்பத்திரும்ப எழுப்பப்பட்டது, டில்லி பாராளுமன்றத்தில்—கடந்த வாரம்!

மங்கி மறைந்து கிடந்த உணர்ச்சிகள் மீண்டும் எழுந்துவிட்டனவோ என்று காண்போர் ஐயுறும் வகையிலே காரசாரமான விவாதங்கள்! தென்னகத்தின் குரலை எதிரொலிப்பதாகக் கூடக் கருதிக் கொண்டிருக்கக்கூடும் அந்த உறுப்பினர்கள்.

அந்த அளவு பட்டவர்த்தனமாக, 'தென்னகம்' 'தென்னகம்' என்றூர்கள் பலர், அச்சம், தயை தாட்சண்யத்திற்குக் கட்டுப்படாமல்!

தென்னகம் தொழில் துறையிலே பின்தங்கிக் கிடக்கிறதென்பதைச் சுட்டிக் காட்டிப் பேசினர் சிலர்.

தென்னகத்துக்கு அநீதி இழைக்கப்பட்டிருப்பதாக ஒரு கருத்து அங்கே இருந்து வருகின்றது என்று எடுத்து விளக்கினர் வேறு சிலர்.

தென்னகத்தைச் சேர்ந்த எங்களது பிரச்சினைகள் வடக்கேயிருக்கிற உங்களுக்குப் புரியவில்லை, என்று இடித்துப் பேசினர் மற்றும் பலர்!

அங்ஙனம் பேசிய அனைவரும் அகில இந்தியக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள்தான்--அகில பாரதத்தையும் கட்டிக் காக்கின்ற பொறுப்புத் தங்கள் தங்கள் தலையிலே சுமத்தப்பட்டிருக்கிறது என்று, சரியாகவோ தவருகவோ, கருதிக் கொண்டிருப்பவர்கள்தான்!

ஆனலும் 'தென்னகம்' என்று வாயார உச்சரித்து மகிழ்ந்தார்கள் — அதன் குறைகளை மாற்றார் உணர்ந்திடும் வகையிலே எடுத்துரைத்து, கடமையைக் கழித்திருக்கிருர்கள்!

அதைப் பொறுத்தவரை நமக்கு அளவு கடந்த மகிழ்ச்சிதான்—அந்த அளவுக்கேனும் அவர்கட்குத் துணிவு பிறந்ததே, பிறந்த மண்ணின்மீது பாசம் ஏற்பட்டதே என்ற வகையில்!

M. S. வெங்கடாசலம், M. A.

உடலிலே ஏற்பட்டிருக்கிற புண்ணை மூடி மறைக்காமல், அதற்குப் புனுகு தடவி நாற்றத்தைப் போக்கிவிட முடியும் என்று கருதாமல், உண்மையை ஒப்புக்கொண்டிருக்கிருர்கள் என்ற வகையிலே நமக்கெல்லாம் மட்டற்ற மகிழ்ச்சிதான் ஆனல் அந்தப் 'புண்' ஆறுவதற்கென்று அவர்கள் சொன்னூர்களே 'வைத்தியம்' அதைத்தான். நம்மாலே ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

புண் கொடுக்கிற வாதை, அம்மம்ம, கொடிது கொடிது; என்றவர்கள், அந்தத் துன்பத்தைப் போக்கிட, நோயாளியை டாக்டரிடம் அழைத்துச் செல்லுங்கள், பரிசோதித்துப் பாருங்கள், இஞ்செக்‌ஷனே ஆபரேஷனே எது வேண்டுமோ அதைச்செய்யுங்கள் என்று சொல்லியிருந்தால், நாமெல்லாம் பெருமைப்பட்டிருப்போம் பரவாயில்லை நம்முடைய பணியைய, கட்சியைப் பொறுத்த அளவில் நம்மோடு எந்த ஒட்டுறவும் கொள்ளாதவர்கள்கூட மிகத் திறம்படச் செய்கிருர்கள் என்று!

ஆனல் அவர்கள் சுட்டிக்காட்டிய 'வைத்தியம் வேறு! ஒளிவு மறைவின்றிக் கூறுவதானல் அது வைத்தியம்தாஞ என்பதே சந்தேகத்திற்குரிய விஷயம்!

புண்ணில் சீழ்வடிகிறது, அது வலியும் தருகிறது, அந்த வலியை நோயாளி மறந்திட ஒரு மார்க்கம் தேவை, அவனது மனம் வேறு இடத்திலே செலுத்தப்பட வேண்டும், எனவே அவனைச்சினிமாவுக்கு அழைத்துச் செல்லுங்கள், என்று போதனை புரிந்தால் எப்படியிருக்கும்? கேட்போர் என்ன எண்ணுவர் அந்தப் போதனையாளர்களைப் பற்றி?

தென்னகம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது — அதனுடைய கருத்துக்கள் எண்ணங்கள் டில்லியிலேயிருக்கிற வடவருக்குப் புரியவில்லை —என்பதையெல்லாம் எடுத்துச் சொன்னவர்கள், நோயாளியை சினிமாவுக்கு அழைத்துப்போ என்று யோசனை சொல்லுகிற பாணியில், பராளுமன்றத்தின் கூட்டம் டில்லியில் நடப்பதைப் போல் தென்னகத்திலும் நடைபெறவேண்டும், என்று ஆலோசனை கூறியிருக்கிருர்கள்.

அங்ஙனம் நடத்தப்பெறுவதன் மூலம் தென்னகத்துக்கு இழைக்கப்பட்டிருக்கிற அநீதி எங்ஙனம் துடைக்கப்படுமோ நாமறியோம்!

நேரிடையாகத் தென்னகத்தைப் பார்த்த பிறகாவது, வடநாட்டு உறுப்பினர்கட்கு, இந்த நாட்டின்மீது கருணை பிறக்காதா, அதன்மூலம் நியாயம் கிடைக்காதா என்ற சபல புத்தியினல் அங்ஙனம் பேசியிருக்கக்கூடும்

([illegible]-ம் பக்கம் பார்க்க)

18 ஆண்டுச் சந்தா ரூ. 8. (29-11-59) தனிப் பிரதி 16-காசு | இதழ் 20

# புகழ்பாடுவோர் கவனத்திற்கு

அண்மையில் நேருவின் பிறந்தநாள் விழாவினைக் கொண்டாடி, அவருடைய புகழ் பாடினர். மனித குலத்தை உய்விக்க வந்து தோன்றியுள்ள மகான் என்றும், இன்னும் ஏதேதோ பல புகழ் மொழிகளை யும் சொல்லி மகிழ்ந்திருக்கின்றனர். தனிப்பட்ட முறையில், அவருடைய அறிவு, ஆற்றல், திறன், முத லிய எதனையும் நாம் குறைத்து மதிப்பிடவில்லை; அவ ரிடம் குறைகளே நிறைந்திருக்கின்றன என்றும் தூற்றத் துணியவில்லை.

ஆனால், இத்தனை பெரியவருடைய ஆட்சி நடக்கிறது, என்ற ஒன்றிலேயே எத்தனை நாளைக்கு நம்பிக்கையோடு இருக்கமுடியும்! இந்த ஆட்சியில் அல்லல் குறைந்து, அவலநிலை மாறி, பசிக்கு உணவு கிடைக்கின்றதா என்று பார்க்க வேண்டாமா? நிம்மதியான வாழ்வு கிடைக்க வேண்டாமா? இவை இல்லாத ஆட்சியை எப்படி நல்லாட்சி என்று கூறமுடியும்?

"நேருவுக்கு நிகர் எவரே உளர்?" என்று கேட்டு விட்டால் மட்டும் போதாது என்பதையாவது உணர வேண்டும். அவருடைய ஆட்சியின் அலங்கோலத்தைப்பற்றிய செய்திகள் அவ்வப்பொழுது வந்து கொண்டிருக்கின்றன.

ஊழல், இன்று நிர்வாகத்துறையில்—குறிப்பாக மத்திய அரசில்—மண்டிக்கிடக்கிறது என்று சொல்லலாம். எதை எடுத்தாலும், ஏதாவது ஒருவகை ஊழல், இலட்சக்கணக்கில், கோடிக்கணக்கில் பணத்தை விழுங்கி ஏப்பமிட்ட ஊழல்; இருந்திடக் காணுகின்றோம். உள்நாட்டு ஊழல் போதாது என்று வெளிநாட்டு ஊழலும் ஏராளமாக நடைபெறுகின்றனவாம்!

"அமெரிக்க நாட்டுத் தலைவர்—ஐசனோவர் வரப்போகிறார். வேறு பல நாடுகளுக்கும் செல்லுகின்றார் என்றாலும், அதெல்லாம் ஒப்புக்காகப் போகிறார். அவருடைய முக்கிய நோக்கம், வருகைக்கே மூல காரணம், இந்தியாதான். இந்தியாவைப் பார்க்கத்தான் வருகின்றார்" என்றெல்லாம் இங்குள்ள சில நாளிதழ்கள் கட்டியம் கூறுகின்றன.

அதே நேரத்தில் அமெரிக்க நாட்டுத் தணிக்கையாளர் தந்துள்ள தகவல் ஒன்று வேதனை பிறக்கச் செய்கின்றது. இன்ன வேலைக்கு என்று சொல்லிக் கடன் கேட்டுப் பெற்றுவந்தால், அந்தத் தொகையை ஏன் அந்த வேலைக்குப் பயன்படுத்தவில்லை—"வீண் செலவு ஏன் செய்கிறாய்?" என்று தனிப்பட்டவனையே கடன் கொடுத்தவன் கேட்கிறான். இந்திய நாட்டு உழவுத் தொழிலுக்காகப் பயன்படுத்துவோம் என்று வாக்குறுதி கொடுத்து ஏராளமான உரம் பெற்றிருக்கின்றனர்; ஆனால் அதில் பாதிக்குமேல் உழவுத் தொழிலுக்காகப் பயன்படுத்தப்படவில்லை. அதே போல் உழவுகருவிகள் செய்வதற்கு என்று வாங்கிய இரும்பிலே பெரும் பகுதியை வேறு வேலைகளில் பயன்படுத்தியிருக்கின்றனர். இதைப்போல் இன்னும் பல குற்றச்சாட்டுகளை அந்தத் தணிக்கையாளரின் அறிக்கை எடுத்துக்காட்டி, இனி இத்தகைய 'அசம்பாவிதங்கள்' நிகழாதிருக்க எச்சரிக்கையும் விடுக்கின்றது.

எந்த அரசாங்கமும், மக்களின் வளர்ச்சிக்கான வழிகளில் செயல்படுகின்றதோ இல்லையோ, அதைப் பற்றிக்கூட அவ்வளவு கவலைகொள்ளமாட்டார்கள் மக்கள். ஆனால் ஊழல் இல்லாமல் இருப்பது ஒரு அரசாங்கத்திற்கு உண்மையிலேயே பெருமையைத் தேடித்தரும் எனலாம்.

அரசாங்கத்திற்குப் பணம் தருவது மக்களே. வரிகளைச் செலுத்தும்போது எத்தனையோ இன்னல்களுக்கு உள்ளாகி எப்பாடுபட்டோதான் செலுத்துகின்றனர். அவர்களது இரத்தத்தை வடித்து எடுத்தளிக்கப்பட்டுள்ள அந்தப் பணம், பெருமதிப்பு வாய்ந்தது. அதனை உணர்ந்து, அதற்குத் தரவேண்டிய மதிப்புத்தந்து, சிக்கனமாகவும், சீரான முறையிலும், செம்மையான வகையிலும் செலவிடுவதுதான் அறிவுடைமை. அதைத்தான் ஒவ்வொருவனும் அரசாங்கம் தனக்கு, தன் பணத்துக்கு, அளிக்கும் கைம்மாறாகக் கருதுகின்றான்.

இன்றைய அரசு இவை ஒன்றினையும் பற்றி எண்ணுவதாகவே தெரியவில்லை. ஊழலும் தானும் உடன்பிறப்பு என்று சொல்லத்தக்க விதத்திலேயே இன்று அரசாங்கத்தின் போக்கு இருக்கிறது.

உள்ளூரிலே இருப்பதைவிட வெளியூரில் நாணயமுடையவன், நல்லவன்என்று பெயரெடுப்பது சுலபம்; எடுக்கவும் வேண்டும். நமது அரசாங்கமோ உள்ளூரில் இருப்பதுபோலவே வெளிநாட்டவரிடமும் நாணயங் கெடுமாறு நடந்துகொள்ளுகின்றது. மானமிழந்து 'மடிப்பிச்சை' கேட்டதோடு, மரியாதையையும் இழந்துவிடும் வகையில் அந்நாட்டுத் தணிக்கையாளரும் குறைகூற இடம் அளித்து நடந்துகொள்

(13-ம் பக்கம் பார்க்க)

2-ம் பக்கத் தொடர்ச்சி

அவர்கள்! ஆனால், பாவம், வடவரின் மனம் கல்மனம், ஏகாதிபத்திய நோக்கம் அவர்களிடத்திலே வேரூன்றியிருக்கிறது என்கிற உண்மையினை அவர்கள் இன்னமும் உணர்ந்தாரில்லை.

ஆனால், அந்த உண்மையை உணருகிற காலம் வெகு தூரத்திலே இல்லை என்பதற்கான அறிகுறிகள் தெள்ளத் தெளியத் தெரிகின்றன. இதோ, தென்னகம் பற்றிப் பேசிய பலரிலே ஒருவர் பேசியிருக்கிற பேச்சு:—

**"தென்னகம் அடிமை நாடுபோல் (காலனி) வடவரால் நடத்தப்படுகிறது என்ற எண்ணம், தென்னகத்து மக்களிடையே மிக வேகமாகப் பரவி வருகிறது"**

இங்ஙனம் எடுத்துரைத்த **பிரகாஷ்வீர் சாஸ்திரி** என்பவர் எந்தச் கட்சியையும் சார்ந்தவரல்லர்—சுயேச்சை உறுப்பினர்—தென்னகத்தைச் சேர்ந்தவர்!

ஏகாதிபத்திய நோக்கம் வடவருக்கு இருக்கிறதென்பதை நேரிடையாக, ஒளிவு மறைவின்றி எடுத்துரைக்க, அவருக்கு விருப்பம் இல்லையோ, அன்றி துணிவுதான் இல்லையோ நாமறியோம்.

அப்படிப்பட்ட நோக்கம் இருப்பதாகத் தென்னகத்திலே ஒரு கருத்து நிலவி வருகிறது என்பது மட்டுமல்ல! அது பரவியும் வருகிறது, என்று சுற்றி வளைத்துத்தான் பேசியிருக்கிறார் — ஆனால் அரசியல் யூகம்கொண்டோர் அனைவரும் எளிதிலே புரிந்துகொள்ளக் கூடும் அவரது உள்ளக்கிடக்கையை, உணர்வின் ஆழத்தை!

திரு. சாஸ்திரியாருடைய வாதித்திலிருந்தும் மற்றும் பலருடைய வாதத்திலிருந்தும் புரிந்துகொள்ள வேண்டியது மற்றோர் உண்மையும் கூட!

தென்னகத்திலேபாராளுமன்றத்தின் ஒரு கூட்டத்தை நடத்துவதன் மூலம் **ஒற்றுமை உணர்வு** ஏற்படுத்திவிட முடியும், அந்த வாய்ப்பையா நழுவவிடுவது, எனவே ஆட்சியாளர்களேசிந்தியுங்கள், என்று ஒருசேர ஒலித்திருக்கிறார்கள்!

என்ன பொருள் இதற்கு?

தென்னகத்திலே பாராளுமன்றத்தின் கூட்டம் நடத்தப்பெற்றால், தெற்குக்கும் வடக்குக்கும் ஒற்றுமை உணர்வு ஏற்படுத்த முடியும் என்று வாதிடுவதானால், இப்போது அந்த ஒற்றுமை உணர்வு இல்லை என்று ஒப்புக்கொள்கிறார்கள் என்று பொருள்! வேறு எப்படி அதை நாம் கொள்ள முடியும்?

தென்னகம் தனிப்பகுதியாக மாறவேண்டும் — வடவர்தம் பிடியிலிருந்து விடுதலை பெற்றாக வேண்டும்—என்று தி. மு. கழகத்தினராகிய நாம் குரல் எழுப்பும் போது "ஆகா, இவர்கள் நாட்டைத் துண்டாட நினைக்கிறார்கள்--பாரதமாதாவைத் துண்டாடுவதா!" என்று வாதாடுகிறார்களே, 'அகில இந்தியா'க்கள், அவர்கள் என்ன சொல்லப்போகிறார்கள் இப்போது—இதற்கு!

**நாடு ஒன்றாக இல்லை--ஒற்றுமை உணர்வு இல்லை—அது ஏற்படுத்தப்படவேண்டும்—இது பாராளுமன்றத்திலே கூறப்படுகிற கருத்து!**

இந்தக் கருத்தைத்தான் நாமும் எடுத்துரைத்து வருகின்றோம் — அதன் பின்பகுதியிலே மாற்றம் அவ்வளவுதான்!

ஆங்கிலேயர்தம் ஆதிக்கம் இந்தத் துணைக்கண்டத்திலே, வேரூன்றுவதற்கு முன்னாலே, 'இந்தியா' இருந்ததில்லை, இனியும் ஒன்றுபட வழியில்லை, என்று வாதாடுகிறோம் நாம்!

ஒன்றாக இருந்ததில்லை என்ற உண்மையினைச் சிற்சில சமயங்களிலே ஏற்றுக்கொண்டு, எப்படியும் 'ஒற்றுமை' ஏற்படுத்தியே தீருவோம் என்று கங்கணம் கட்டிக்கொண்டு திரிகின்றார்கள் 'அகில இந்தியா'க்கள்!

எனவே, இல்லாத ஒன்றை சிருஷ்டிக்கப் பாடுபடுவது, அவர்கள்தானே தவிர, தி. மு. கழகத்தினராகிய நாமல்ல!

இல்லாத ஒற்றுமையை இருப்பதாக மனப்பால்குடித்துக்கொண்டு, பசைபோட்டு ஒட்டமுயலுகிறார்கள் அவர்கள்!

அந்தமுயற்சி பலிக்காதது மட்டுமல்ல, பயன்தராததுகூட, என்கிறது தி. மு. கழகம். அதைத் தன்னையுமறியாமல் ஏற்றுக்கொண்டிருக்கிறார், பாராளுமன்றத்திலே பேசிய சாஸ்திரியார்!

ஆனாலும் 'ஒற்றுமை' 'ஒற்றுமை' என்று, பாவம், ஓலமிட்டிருக்கின்றார்கள், அவரும் மற்றும் பலரும்.

அன்று நடைபெற்ற அந்த விவாதத்தில், நாம் மனதிலே கொள்ளவேண்டிய மற்றோர் மக... தான உண்மையும் உண்டு.

பாராளுமன்றத்தின் கூட்டங்கள் டில்லியிலும், தென்னகத்தின் ஒரு இடத்திலுமாக மாறிமாறி நடத்தப் படுவது, எவ்வளவு தொல்லை தரு வது; எந்த அளவு தேவையற்ற செலவுகள் அதன்மூலம் ஏற்படக் கூடும், என்பதைச் சுட்டிக்காட்டிப் பேசியிருக்கிறார், பாராளுமன்ற வி... கார அமைச்சர் திரு. சின்ஹா என்... வர்!

நாடு பெரியதுதான், அதற்காக பாராளுமன்றம் பல்வேறு இடங் களிலே கூடவேண்டுமென்... தில்லை. பாராளுமன்றம் சுற்றிக் கொண்டே இருப்பது நல்லதல்ல என்று வாதிட்டிருக்கிறார் அவர்!

**"பாராளுமன்றத்தின் கூட்டம் தே... னிட்டிலே நடைபெறுவதற்காக ஆகி... பணத்தை, தென்னகத்தின் தொழி... வளத்தைப் பெருக்கப் பயன்படுத்து... கள்"** என்றார், ஆந்திரத்தைச் சேர்ந்த கம்யூனிஸ்டு உறுப்பின... **நாகிரெட்டி** என்பார்!

அந்த இருவரது கருத்துக்களும் தமிழகத்து ஆட்சியாளர்தம் கவ... னத்தைக் கவரவேண்டியகருத்துக் கள்!

தி. மு. கழகச் சட்டமன்றக்கட்... மிகத் தீவிரமாக எதிர்த்தும் தேவையற்ற செலவுகள் ஏ... என்று கேட்டும், உதகமண்டலத் திலே சட்டமன்றத்தைக் கூட்டி... பார் பார் நினைத்ததைச் சாதித்து விட்டோம் என்று மார்தட்டி... நமது ஆட்சியாளர்கட்குப் பாட... புகட்டுவதாக அமைகிற... இச்சம்பவம்.

இடித்துக்கூறியது நாம்-எனவே... ஏற்றுக்கொள்ளவில்லை அவர்கள்...

இப்போது இந்தக் கருத்து கூறப்படுவது, டில்லி அமைச்சரா... —எனவே அதுவாவது நம... ஆட்சியாளர்களது கண்களை... திறக்குமென்று எதிர்பார்க்கிறோ...

எனவே கடந்த வாரத்தில் நடை... பெற்ற பாராளுமன்றக் கூட்ட... 'அகில இந்தியா'க்கள் அனைவரு... கும்--சிறப்பாக தமிழகத்து அமை... சர்கட்கும் — நல்ல பாடங்களை... புகட்டவல்லது என்று மனதா... நம்புகிறோம்! அந்தப் பாடத்தை... பெறுவார்களா? அவர்தம் கரு... திலே இருக்கின்ற பழுது நீக்க... படுமா?

✻

# ஆண்ட பரம்பரையினர் நாம்

## அதை

# மீண்டும் பெறுவோம்

இன்றுள்ள அகில இந்திய அரசியல் அமைப்பில் வடநாட்டைவிடத் தென்னாடு பின்தங்கியுள்ளதையும், வடவரால் தென்னவர் பெரிதும் வஞ்சிக்கப்பட்டு வருவதையும் நாட்டின் நடவடிக்கைகளைக் கொண்டும் நாடாள்வோர் தருகின்ற புள்ளிவிபரங்களைக் கொண்டும் நல்ல முறையிலே தெள்ளத் தெளிய விளக்கிக்காட்டி வருகிறது திராவிட முன்னேற்றக் கழகம்!

திராவிட முன்னேற்றக் கழகம் தந்து வருகிற புள்ளிவிவரங்களைத் தக்க முறையிலே மறுத்துரைத்து வாதிட்டு வெற்றிகாணும் வகையும் வாய்ப்பும் எந்தத் தேசிய வாதிக்கும், தென்னக அமைச்சரவைக்கும் இதுவரை கிட்டவில்லை; இனிக்கிட்டவும் முடியாது!

ஏனென்றால், தில்லிப் பேரரசால் தென்னகம் எல்லாத் துறைகளிலும் பின்தள்ளப்பட்டு வருகிறதென்பதையும், பிற்போக்கிலிருக்குமாறு புறக்கணிக்கப்பட்டு வருகிறதென்பதையும் தெளிவாக விளக்கிக் காட்டுகிற நாம், ஆட்சியாளர் தரும் புள்ளி விவரங்களையே அதற்கு ஆதாரமாக்கிக் காட்டி வருகிறோம் என்றாலும்; நாம் பொறுப்போடு பணியாற்றுவதையும், நமக்கு நாடோறும் பெருகி வருகிற வளர்ச்சியையும் பேராதரவையும், நாம் எடுக்கும் முடிவுகள் நாட்டு மக்களின் நல்லாதரவோடு வெற்றிகரமாக முடிக்கப்பட்டு வருவதையும் காண்கின்ற ஏக இந்திய வாதிகள் நம்மீது பொறாமை கொண்டு, போகுமிடமெல்லாம் நம்மை இழித்தும் பழித்தும் பேசி வருகின்றனர்; நம்மைப்பற்றி இல்லாததும் பொல்லாததும் சொல்லி நம்மீது அவர்களுக்குள்ள வெறுப்பைக் காட்டிக்கொள்கின்றனர்,

அரசியல் பொதுமேடையானாலும் சரி, ஆரம்பப்பள்ளித் திறப்பு விழாவானாலும் சரி, செல்லுமிடமெல்லாம் பேசுவதற்கான வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் நம்மைத் தாக்கிப் பேசிவருகின்ற ஏகஇந்திய இணைப்பாளர்கள், இன்றைய அரசியல் பிணைப்பில் "வடக்கு வாழ்கிறது; தெற்குத் தேய்கிறது" என்று நாம் தக்க ஆதாரங்களோடு கூறிவருவதைத் தகுந்தமுறையிலே மறுத்துரைத்தது கிடையாது— மறுத்துரைக்கவும் முடியாது! எனினும், "வடக்கு வாழவுமில்லை; தெற்குத் தேயவுமில்லை. இவை எல்லாம் வெறும் அலங்காரச் சொற்கள், அடுக்குமொழிகள்!"

**செல்வன்**

என்கிறார்கள். "வடக்கேதான் பிரமாண்டமான அணைகள் கட்டப்படுகின்றன; பெரிய பெரிய ஆலைகள் நிறுவப்படுகின்றன என்று கூறுபவர்களெல்லாம் நாட்டைத் துண்டாட விரும்பும் 'நாசகாலர்கள்' என்கிறார்கள். இவ்விதம் பேசித் தீர்ப்பதன்மூலம் தங்கள் கருத்தின்மேல் மக்கள் மன்றம் காணுகின்ற மாசைக் களைந்துவிட முடியும் என்று மனப்பால் குடிக்கிறார்கள்.

இப்படி இந்நாட்டுக் கோலேந்திகளும் அவர்களின் கொடி தாங்கிகளும் நம்மீது காய்ந்தும் நாடுவாழ நாம் தரும் திட்டங்களைக் குறை கூறியும் வருவது ஒருபுறமிருக்க, சில தேசிய ஏடுகளும் நம்மீது சீறிப்பாய்கின்றன. நமக்கு மறுப்புரைப்பதாக எண்ணிக்கொண்டு 'தெற்குத்தேயவில்லை; வளர்கிறது' என்று தலைப்பிட்டுக் கட்டுரைகள் தீட்டிவருகின்றன.

எனவே, 'தெற்குத் தேயவில்லை' தழைக்கிறது! வடக்குவளரவில்லை; என்றும்போல் வாழ்கிறது! என்று பேசியும் எழுதியும் வருகிற அகில இந்தியக் கண்ணோட்டக்காரர்களின் தேசியத் திருப்பார்வைக்குச்சென்ற சில வாரங்களாக வெளிவந்த வடக்கின் வளர்ச்சிபற்றிய செய்திகளைக் குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறோம்.

விவசாயத் துறையிலும் வேலையில்லாத் திண்டாட்டத்தை வேரோடு களைந்து நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தும் தொழில் துறையிலும் தில்லிப்பேரரசு தென்னகத்துக்கு இழைத்து வருகிற அநீதி குறித்து ஆதாரங்களை ஆயிரம் ஆயிரமாக நாம் காட்டியிருக்கிறோம். "அல்லலுறும் இனத்தாரின் அவலவாழ்வு துடைக்கப்படவில்லையே; அதற்குத் தேவையான இரக்க சிந்தை கடுகளவேனும் அவர்களிடம் இல்லையே!" என்றும் புலம்பியிருக்கிறோம். ஆனால் நம் தாழ்நிலையைப் புரிந்து கொண்டவர்கள், மேலும் மேலும் நம் வாழ்வைப் பாழ்படுத்தத்தான் ஆடிப்போடு கிளம்புகிறார்கள்.

தென்னகத்தின் கனிச் செல்வங்கள் அனைத்துமே பூமி மாதாவின் மடியிலே புதைந்து கிடந்து மக்கிடத்தான் வேண்டும் என்று கருதுகிற இந்தியப் பேரரசினர், அதே நேரத்தில் வடக்கை வளங்கொழிக்கும் பொன்னிலமாக மாற்றவும் வடவரின் வாழ்வைச் சிறக்க வைக்கவுமான பெருமுயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள்.

பூட்டான் நாட்டில் ஓடும் "ஜல்தகா" என்ற நதியின்மீது அணைகட்டி மின்சார உற்பத்தி செய்யும் திட்டம் ஒன்றிற்காக பூட்டானுடன் ஒப்பந்தம் செய்திருக்கிறது மத்திய அரசு! இத்திட்டத்தை ஏற்று நடத்தும்

பொறுப்பு மேற்கு வங்க சர்க்காரிடம் ஒப்படைக்கப்பட்டு, இதற்காக ரூ. 4·36 கோடிவரை செலவிடத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தின் மூலம் இரண்டு கட்டங்களில் மொத்தம் 3600 கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுமாம்.

அரசினர் துறையிலிருக்கும் எல்லாத் தொழிலுக்கும் திட்டங்கள் வகுக்கவும், இயந்திர மாதிரிகளை அமைக்கவுமான திட்டமொன்றை நிறைவேற்றி, அதற்கான வேலையை ராஞ்சியில் மேற்கொண்டிருக்கிறது அனைத்திந்தியப் பேரரசு! மேலும், பிரிட்டிஷ் டிராக்டர்களை இந்தியாவிலேயே உற்பத்தி செய்வதற்கான ஆலை நிறுவும் திட்டமொன்றை அங்கீகரித்திருக்கிறது. பிரிட்டிஷ் இந்திய நிறுவனங்கள் இரண்டின் கூட்டு முயற்சியால் நிறுவப்படும் இத்தொழிற்சாலை ஆண்டுதோறும் 1250 டிராக்டர்களை உற்பத்தி செய்யுமாம்.

சுட்டெரிக்கும் பாலை நிலத்தைச் சுந்தரச் சோலையாக மாற்றுவதற்கான திட்டமொன்றைப் போட்டுப் புதிய நதியொன்றையே வெட்டியிருக்கிறார்கள் ராசஸ்தானத்தின் குறுக்கே! 133 மைல் நீளத்துக்கு வெட்டப்பட்டுள்ள இந்த நதிக்கு மொத்தம் ரூ. 66 கோடிதான் முதலில் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் வறண்ட பாலைவனத்தை வளங்கொழிக்கும் விளைநிலமாக்குவதற்காக வெட்டப்பட்ட இந்நதிக்காக ரூ. 85 கோடிவரை செலவுசெய்து வேலையைப் பூர்த்தியாக்கியிருக்கிறார்கள். இத்திட்டத்தின் மூலம் ராசஸ்தானத்திலுள்ள சுமார் 8000 சதுர மைல் வறட்சிப் பிரதேசங்கள் அபிவிருத்தியடைந்து அதன் மூலம் ஆண்டொன்றுக்கு ஏறக்குறைய 5·7 இலட்சம் டன் உணவு உற்பத்தி அதிகரிக்குமாம்.

இப்படி நாளுக்கொரு ஆலையும், பொழுதுக்கொரு தொழிற்சாலையுமாக வடக்கு வளர்ந்து வருவதையும், வடவரின் வாழ்க்கை வசதிகள் பெருக்கப்பட்டு வருவதையும் ஆதாரங்களோடு நாம் விளக்கிக் காட்டுகிறபோதெல்லாம், ஏற்ற முறையில் இவற்றை மறுத்துரைத்து வாதிடும்வகையும் வழியுமற்ற ஏக இந்தியப் பித்தர்கள், "தொழில்கள் துவங்க வடக்கேதான் வாய்ப்பு இருக்கிறது; திட்டங்கள் தீட்ட வடக்கில்தான் வளமிருக்கிறது; தென்னாட்டில் செய்ய என்ன இருக்கிறது? மூன்றும் திட்டத்தில் அதிகப்பணம் கேட்டுப்பெற்று என்ன செய்வது?"—என்றெல்லாம் இட்டுக்கட்டிப் பேசித் திரிகின்றனர்.

இங்ஙனம் உண்மைகளை மூடிமறைத்து எதிர்கட்சிகளைப்பற்றித் தாறுமாறுகப் புனைந்துரைப்பதிலும், இருப்பதை இல்லையெனக் கூறிப் புலம்பித் திரிவதிலும் தனித்திறமை பெற்றுள்ள ஆட்சியாளருக்கு அண்மையில் சுற்றுப்பயணம் செய்துள்ள அமெரிக்க வர்த்தகக் குழுவின் அறிக்கையினைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

"நல்ல தொழில்களில் முதலீடு செய்யத் தென்னகத்தில் நிறைய மூலப்பொருள்கள் இருக்கின்றன. இயந்திரங்களும் தொழில்நுட்பமும் தருவோருடன்ஒத்துழைத்துக் கூட்டாகத் தொழில் நிறுவனங்களைத் துவக்கப் பல வாய்ப்புகள் இருக்கின்றன" என்று கூறியுள்ள அவ்வர்த்தகக்குழு, எடுத்துக்காட்டாக, "தென்னகத்தின் குரோம் கனிப்பொருளை அமெரிக்கா இறக்குமதி செய்யமுடியும்; தென்னுப்பிரிக்காவின் ரகத்துக்குச் சமமாக இதன் தரம் இருக்கிறது" என்று இப்படிச் சிலவற்றைக் குறிப்பிட்டுள்ளதோடு, "தென்னுடு தொழில் துறையில் வளர்ச்சியுற வேண்டுமானல் முக்கியமாக ஒரு உருக்குத் தொழிற்சாலை அமைவது அவசியமாகும்" என்று வற்புறுத்தியுமிருக்கிறது.

இன்னும் தென்னகத்தின் இயற்கை வளம்பற்றி அண்மையில் வெளியாகியிருக்கும் உண்மைகள் ஆட்சியாளருக்கு அறைகூவல் விடுவனவாக உள்ளன.

"நீலகிரி மாவட்டத்தில் கெட்டி என்னுமிடத்தில் 'டிட்டானியம்' என்ற உருக்குப்போன்ற பளபளப்பான வெள்ளை உலோகம் சுமார் 20-இலட்சம் டன் கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது" என்று நிலவள ஆராய்ச்சி நிபுணர்கள் கண்டறிந்து கூறியிருக்கின்றனர்.

இதனைப் பயன்படுத்திக்கொண்டு 'துருப்பிடிக்காத வெள்ளை உருக்குச் சாமான்கள்' (ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்) தயாரிப்பதற்கான ஒரு தொழிற்சாலையை நிறுவும் வாய்ப்பு இன்றைய ஆட்சியினருக்கு ஏற்பட்டிருக்கிறது.

இதே நீலகிரி மாவட்டத்தில் அலுமினியம் தொழிலுக்குத் தேவையான "பாக்சைட்" கிடைப்பதாகவும் நிபுணர்கள் அறிவித்திருக்கின்றனர். இந்த 'பாக்சைட்' சேலம் மாவட்டத்தில் சேர்வராயன் பகுதியில் கிடைக்கும் பாக்சைட்டைப் போன்று தரமானது என்றும் சான்று பகன்றுள்ளனர்.

இதனைப் பயன்படுத்திக் கொண்டு அலுமினியம் தொழிற்சாலையை அரசாங்கம் ஏற்படுத்தலாம்.

இதேபோன்று வேறு பல இரும்புத் தாதுப்பொருள்களும், பாண்டங்கள் செய்யப் பயன்படும் ஒருவகை களிமண்ணும் கிடைப்பதாக நிபுணர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

இவற்றைப் பயன் படுத்தியும் ஏற்ற பல தொழிற்சாலைகளைத் துவக்கலாம். இவ்வாருன பல தொழில்களை இங்கே துவக்குவதாலும், ஏற்ற முறையில் அவற்றைச் சீராகப் பேணி வளர்ப்பதாலும் நாட்டுக்கும் நாட்டுமக்களுக்கும் நன்மைகள் பல ஏற்படும். எல்லா மக்களுக்கும் வேலை வாய்ப்பளித்து, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கலாம்; இறக்குமதியைக் குறைத்து ஏற்றுமதியை ஊக்குவித்து அயல்நாட்டு நாணயமாற்று வசதியை அதிகரிக்கலாம்; நாட்டின் வருமானத்தை உயர்த்தி, மக்களைப் பாதிக்கும் வரிச்சுமைகளைக் குறைக்கலாம்; மக்களின் வருமானத்தைப் பெருக்கித்தந்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தலாம், அவதியுறும் மக்களின் அல்லல்களை நீக்கி அமைதியுடன் அவர்கள் வாழ்வதற்கான வழிகோலலாம்.

ஆனல், கடந்த பன்னிரண்டாண்டுக் காலக் காங்கிரஸ் ஆட்சியில் இதுவரை தென்னகத்தில் ஏற்படவேண்டிய அளவுக்கு தொழில்கள் ஏற்படவில்லை; தென்னவரின் தீராத் துயரங்கள் தீர்க்கப்படவில்லை. தென்னகத்தில் கிடைக்கும் மூலப் பொருள்களைக்கொண்டு இங்கு தொழில்களைத் துவங்காது, அந்த மூலப் பொருள்களை வடக்கிற்குக் கொண்டுசென்று, அங்கே புதுப் புதுத் தொழில்களை ஏற்படுத்திப் பெருமளவுக்கு அங்கு

வாழ்வு மலரவே வழிசெய்யப்படுகிறது.

மேலும் தென்னகத்தின் இயற்கை வளத்தைப் பயன்படுத்திப் புதுத்தொழில்களைத் தென்னகத்தில் ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்டிருக்கும் ஓரிரு முயற்சிகளும் விரைவாகவோ, விரும்பத்தக்க முறையிலோ நடைபெறவில்லை.

இந்த அவல நிலைக்குக் காரணம், டெல்லியுடன் தென்னகம் ஒட்டி வாழவேண்டிய இக்கட்டான பிணக்கிற்கு இடமளித்துள்ளதே என்பதை ஆயிரமாயிரம் சான்றுகளோடு அன்றாடம் நாம் எடுத்துச் சொல்லி வருகிறோம்.

இன்றைய அரசியல் சட்டப்படி நிலவளத்தை ஆராயும் உரிமை கூட மாநில ஆட்சியினருக்கு இல்லாத நிலையில், எல்லா அதிகாரங்களையும் தில்லி ஏகாதிபத்திய அரசு தட்டிப் பறித்துக்கொண்டிருக்கிறது. புதிய தொழில்களை விரும்பியவாறு அமைத்துக் கொள்ளும் முழு அதிகாரமும் மாநில அரசினருக்கு இல்லை. அந்த அளவுக்கு மாநில ஆட்சியினர் மத்திய ஆட்சியினரின் அதிகாரப் பிடியில் சிக்கியிருக்கின்றனர்.

இன்று நமது நாடு—திராவிடம் இந்தியத் துணைக்கண்டத்துடன் வலுவில் இணைக்கப்பட்டுக்கிடக்கிறது. இந்த விரும்பத்தகாத இணைப்புப் பணியினை வெளியேறிய வெள்ளை ஏகாதிபத்தியம் செய்து முடித்துவிட்டது. இவ்விணைப்பில் தங்கள் பகுதியின் எதிர்கால ஆக்கம் அடங்கிக்கிடப்பதால் இவ்விணைப்பு நீடித்திருக்க வேண்டுமென ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் டில்லியினர் விரும்புகின்றனர் என்றாலும், நாம் வாழவும் நம்நாடு நலம் பல பெறவும் நமது திராவிடம் இப் பொருந்தாக் கூட்டிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள வேண்டும்; அதுவும் விரைவில் நிறைவேறவேண்டும். இதுவே, இது ஒன்றே தென்னகத்தின் இணையற்ற விடுதலை இயக்கமாக வளர்ந்துவருகிற திராவிட முன்னேற்ற கழகத்தின் திட்டவட்டமான இலட்சியம் — தெளிவான குறிக்கோள்.

இந்த நமது அடிப்படை இலட்சிய முழக்கத்தை நாட்டுமக்களிடையே எடுத்துவைத்துச் சிந்திக்கச் செய்து அவர்களைச் செயலாற்ற அழைப்பதையும், நாட்டு மக்கள் நமக்கும் நமது இலட்சியத்துக்கும் தந்துவருகிற பெருமதிப்பையும் பேராதரவையும் கண்டுதான் இங்கே இருப்பவர்—இன்ப வாழ்விற்கான எல்லா வசதிகளுமின்றி நம்மைப்போல் வாட்டத்திலும் வறட்சியிலும் வாடிக்கிடப்பவர்—எதையும் தாமே செய்யும் உரிமையற்று எதற்கெடுத்தாலும் வடநாட்டிற்குக் கால் கடுக்கக் காவடி தூக்கிச் செல்பவர் — எதுவும் கேட்ட அளவுக்குக் கிடைக்கப் பெறாமல் ஏமாற்றத்தோடு இங்கு வருவதையே வழக்கமாகக் கொண்டிருப்பவர் — இத்திருக்கோலத்திலிருக்கிற தென்னகம்வாழ் தேசியவாதிகள்—காங்கிரஸ் தலைவர்கள், நம்மைப் பிரிவினை விரும்பும் 'பித்தர்கள்' என ஏசவும், நம்மீது அடக்குமுறைகளை அள்ளி வீசவும் செய்கின்றனர்.

இப்படி, தில்லி ஏகாதியத்தியத்துக்கு வாழ்த்துக்கூறி, விடுதலை கோரிவரும் நம்மவரை ஏசித் திரிந்து, தங்களுக்குக் கிடைத்திருக்கிற அரசியல் ஏற்றத்தைப் பாதுகாத்துக் காலங்கழித்துவரும் இந்த 'நல்லவர்கள்' தெளிவு பெறவும் நமது இலட்சியத்தில் பொருந்தி இருக்கக்கூடிய நியாய வலிவைத் தெரிந்துகொள்ளவும் வேண்டி இங்கு சில செய்திகளைத் தருகிறோம்.

"ஆந்திர மாநிலத்தில் மொத்தம் 300 இலட்சம் ஏக்கர் விளைநிலமிருக்கிறது. இதில் ஒவ்வொரு ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கும் 2 டன் என்று கணக்கிட்டாலும் மொத்தம் 6000 டன்வரை இரும்பு வேண்டும். இது, வண்டிப்பேட்டை, கலப்பைக் கொழு முதலிய விவசாயக் கருவிகளுக்காகத் தேவைப்படுகிறது. ஆனால், ஆந்திரத்துக்கு 1958-59ம் ஆண்டில் 4000 டன் மட்டுமே ஒதுக்கப்பட்டிருக்கிறது.

"அதே நேரத்தில் பம்பாய் மாநிலத்திற்கு 22000 டன்களும் உ. பி. மாநிலத்திற்கு 19000 டன்களும், மத்தியப் பிரதேச மாநிலத்திற்கு 15000 டன்களும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது ஆந்திரமாநிலத்திற்கு அநீதி இழைப்பதாகாதா?" என்று ஆந்திர மாநில அரசினர் அதிகாரி ஒருவர் வேதனையுடன் வினவியிருக்கிறார்.

நமது நாட்டின் நலனைக் காப்பதில் மாற்றாந்தாய் மனப்போக்கில் நடந்துகொள்கிறது — ஓரவஞ்சனையாகச் செயல்பட்டு வருகிறது தில்லி ஏகாதிபத்தியப் பேரரசு என்ற நமது குற்றச்சாட்டு மிகமிக நியாயமானது — நேர்மையானது என்பதை மெய்ப்பிக்க மேலே நாம் தந்துள்ள ஆந்திர அதிகாரியின் குமுறலே தக்க சான்றாகும்.

1959-ம் ஆண்டின் மூன்றாவது காலாண்டில், தெற்கு ஆசியாவின் பல்வேறு திட்டங்களுக்கு உதவுவதற்காக அமெரிக்காவிலுள்ள 'ராக்பெல்லர்' நிறுவனம் 1,39660 டாலர் வரை மானியம் அளிக்க இசைந்திருக்கிறது. இதில் இந்தியத் துணைக்கண்டத்திற்கென ஆறு மானியங்கள் தரப்பட்டிருக்கின்றன.

புதுடில்லியிலுள்ள இந்திய சர்வதேசக் கழகத்திற்கு 120000 டாலர்களும், பீகார் மாநில அதிகாரியான திரு. எஸ். டி. சின்ஹா அமெரிக்கப் பல்கலைக்கழகத்தில் படிக்க 9000 டாலர்களும், கல்கத்தா இந்திய மொழிக் கழகத்துக்கு 9000 டாலர்களும், புதுடெல்லியிலுள்ள தேசியக் கல்விக் கழகத்தைச் சேர்ந்த திரு. கே. ஆர். கிருபளானி அமெரிக்கா சென்று பயில 1000 டாலரும், லக்னோ பல்கலைக்கழகத்துக்கு 3060 டாலரும் அனைத்திந்தியப் பேரரசு அளித்திருக்கிறது.

இவ்வாறு இந்தியாவிற்கென வழங்கப்பட்ட மானியங்கள் அனைத்தும் வடநாட்டிற்கே வழங்கப்பட்டிருக்கிறது!

வெளியேறிய வெள்ளையனால் நாமெல்லாம் விரும்பாத முறையில் இணைக்கப்பட்ட நமது நாட்டையும் சேர்த்துக்கொண்டு, தன்னைப் பரந்துகிடக்கும் ஒரு பெரும் பூமியெனக்காட்டி அமெரிக்கா போன்ற வெளிநாடுகளிடம் இனாம் பெற்றுக் கொண்டிருக்கிறது — ஏராளமான தொகையைக் கடனாக வாங்கிக் கொண்டுமிருக்கிறது இந்தியப் பேரரசு. இப்படி நமது திராவிடத்தையும் காட்டி வெளிநாடுகளிடம் இனாம் பெறுகின்ற பணத்தை இங்குள்ள நம்மவரின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் பகிர்ந்தளிக்க வேண்டுவதே நீதியும் நேர்மையுமாகும். ஆனால், தென்னவர்க்குச் சேரவேண்டிய பங்கையும் சேர்த்து வடவர் முன்னேற்றத்திற்கே தில்லி ஏகாதிபத்தியம் செலவு செய்து வருகிறது.

இந்தப் பேருண்மையை நியூயார்க் 'ராக்பெல்லர்' நிறுவனம் தந்த மானியம் பயன்படுத்தப்பட்டிருக்கிற வேதனைச் செய்தி நன்கு விளக்கிக் காட்டுகிறது.

அனைத்திந்தியப் பேரரசுக்கு பிரெஞ்சு அரசு 2500 கோடி பிராங்க் (ரூ. 28 கோடி) கடன் உதவி செய்வதாக கடந்த ஆண்டில் ஒப்புக்கொண்டிருந்தது. இப்போது இத்தொகையினை இரண்டுமடங்காக உயர்த்தி உதவப் பிரான்சு நாடு உடன்பட்டிருக்கிறது. 1960 சனவரிக்குள் இந்தத்தொகையினை (ரூ. 56 கோடி) செலவிடக் கால வரையறை நீடிக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கடன வசதியைப் பயன்படுத்தி வடநாட்டுத் திட்டங்கள் பலவற்றிற்கும் அந்நியச் செலாவணி ஒதுக்கப்பட்டு, இயந்திரங்கள் இறக்குமதி செய்துகொள்ள அனைத்திந்தியப் பேரரசு அனுமதி அளித்திருக்கிறது.

முதலில் ஒப்புக்கொண்ட ரூ. 28 கோடி கடனிலிருந்து தென்னாட்டிற்கு ரூ. 43 இலட்சம் மட்டுமே ஒதுக்கப்பட்டு 'பத்ரா' திட்டத்திற்கு லைசென்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது. எஞ்சிய தொகை அனைத்தும் வடநாட்டுத் திட்டங்களுக்கே பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

நமது நாட்டையும் காட்டி, இந்தியத் துணைக்கண்டத்தின் தொழிலாக்கத்துக்கெனப் பிறநாடுகளிடம் கடனைப் பெறுகின்ற பெருந்தொகையை வடநாட்டின் தொழிலாக்கத்துக்கே வடவரின் வாழ்க்கை நலத்திற்கே தில்லி ஏகாதிபத்தியம் இதுவரையில் பயன்படுத்தி வந்திருக்கிறது—வருகிறது—வரப்போகிறது என்ற வேதனை தரும் நடைமுறை உண்மையை உறுதிப்படுத்த பிரெஞ்சு நாட்டிலிருந்து பெறக்கூடிய ரூ 56- கோடி கடன் தொகையைச் செலவிட எடுத்திருக்கும் ஏற்பாடே போதிய சான்றாகும்.

இப்படி அடிக்கடி நாம் காட்டி வருகிற ஆயிரமாயிரம் ஆதாரங்களையும் புள்ளி விவரங்களையும் கொண்டு இன்றைய ஏக இந்திய அரசியல் அமைப்பில் — தென்னாட்டுத் தொழில்வளம் பெருக்கப்படவில்லை; தென்னவர் துயரங்கள் துடைக்கப்படவில்லை என்பதையும், அதே நேரத்தில் தென்னாட்டு வளத்தைக்கொண்டும், வரிப்பணத்தைக்கொண்டும் வடநாட்டு வளம் பெருக்கப்படுகிறது; வடவர் வாழ்வு சிறக்க வழிகோலப் படுகிறது என்பதையும் எவரும் நன்குணரலாம்.

இங்ஙனம் ஓரவஞ்சனையாகவும் ஒரு கண்ணுக்கு வெண்ணெயும் மறுகண்ணுக்குச் சுண்ணாம்பும் தடவும் மாற்றாந்தாய் மனப்பான்மையிலும் நடந்துகொள்ளும் ஏகாதிபத்திய அரசோடு நாம் இணைந்திருப்பதால்தான் நாள்தோறும் நம்நாட்டு வளம் சுறண்டப்படுகிறது; நலமுடன் வாழவழியின்றி நம்மவர்கள் தேம்பித்திரிகின்றனர்.

எனவே, மண்ணெல்லாம் பொன் விளையும் தங்கத்திருவிடத்தை—எண்ணும்போதெல்லாம் இனிக்கும் இனிய மொழியை — இவை முன் எவை நிகர் எனத்தக்க இலக்கியச் செல்வங்களை—மாற்றாரிடம் தோற்றோர் என்றில்லாத வீர வரலாற்றை—களங்கமற்றதும் கடன் வாங்கிச் சேர்க்காததுமான கலையை, கலாச்சாரத்தைப் பெற்றுள்ள நாம், இனத்தால்-இயற்கையமைப்பால், வரலாற்றால் — வாழ்வின் முறைகளால், முற்றிலும் வேறுபட்ட வடவரோடு ஒட்டிக் கொண்டிருப்பதைவிட்டு, ஒப்பற்ற "திராவிடத் தனி அரசு" காண்பதே நாடுவாழவும் நம்மவர் நலிவு தீரவுமான ஒரே ஒரு வழியாகும்.

இந்த எழில் திராவிடத்தின் விடுதலைக்காக ஏற்ற பணியாற்ற வேண்டுவதும், இயலும் வகையிலெல்லாம் பாடுபடவேண்டுவதும் இனப்பற்றும் ஏற்ற மொழிப்பற்றும், உரிமை உணர்வும், உயர் தன்மான உணர்ச்சியும் மிக்க ஒவ்வொரு திராவிடரின் உயரிய கடமையும் ஒப்பற்றத்தொண்டுமாகும்.

எனவே, எல்லா வளமுமுள்ள நம் நாட்டைச் செல்வம் கொழிக்கும் சிங்காரச் சோலையாக மாற்ற—இல்லாமையை இல்லையெனச் செய்து, இன்பவாழ்வுக்கான எல்லாம் கொண்டு இன்புற்று நாம் வாழ—ஆண்ட நம் பரம்பரையின் மாண்ட பெருமையை மீண்டும் பெற அறிவுக் கூர்மையுடனும் ஆண்மைத் திறமையுடனும் விளங்கி எந்நாட்டவருக்கும் வழிகாட்டியாய் நாம் திகழ வழிவகுக்கும் 'திராவிடநாடு திராவிடர்க்கே!' என்ற இலட்சியகீதத்தை—இன்ப நாதத்தை ஒரே ஒலியாய் ஒலித்துக்காட்டி உயர் 'திராவிடத்தை' மீட்க ஒற்றுமையுடன் போராடுவோமாக!

★

---

மதுரை மாவட்ட

# திராவிட மாணவர் முன்னேற்றக் கழக முதல் மாநாடு

## மதுரை விக்டோரியா எட்வர்டு மண்டபத்தில்

**29—11—59 ஞாயிறு காலை 9-மணி முதல் மாலை 6-மணி வரையிலும் நடைபெறும்.**

தலைவர்

**கே. ஏ. கிருட்டினசாமி பி. ஏ.**

திறப்பாளர்:

**பி. எஸ். மணியம் பி. ஏ.**

மாநாட்டில் மாணவர் பொதுச்செயலாளர் எஸ். டி. சோமசுந்தரம் (பி. இ.) அவர்களும் மற்றும், டி. கே. பொன்னுவேலு பி. ஏ., சு. ஆறுமுகம் பி. ஏ., கோவை செழியன் பி. ஏ., ப. நெடுமாறன் பி. ஏ., பி. இராசமாணிக்கம் பி. ஏ., பூவை இராமானுசம் பி. காம், சி. என். ஏ. பரிமளம், மோகன்தாஸ், தி. அழகிரிசாமி பி. ஏ., உ. பில்லப்பன் எம். ஏ., பி. பாலசுப்ரமண்யம் பி. இ., கிருட்டினன் பி. எஸ்சி., டி. கோபலகிருட்டினன் பி. ஏ. என். வி. என். சோமு பி. ஏ., இராசகுமார் பீட்டர், தோழியர் சற்குணம், ஜே. என். இராசு, அ. இளங்கோவன், எஸ். ஆர். பாலசுப்பிரமண்யம் பி. ஏ., எம். கருப்புசாமி, கே. எஸ். சம்பந்து (பி. இ.) வே. செவந்தரராசன் பி. ஏ., தங்கபாண்டியன் பி. ஏ., வெற்றிச்செழியன், இளமாறன் எம். ஏ. தவகி, வெற்றிச்செல்வன் பி. ஏ., இளம்வழுதி பி. ஏ., அ. பாலு பி. ஏ., மாரவேள் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

**மாநாட்டுச் செயலாளர்கள்.**

# சத்திரத்துப் பாடல்கள்

## 1

புகைவண்டியும் உந்து வண்டியும் இல்லாத பழங்காலத்தில் மக்கள் ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குச் செல்ல வேண்டுமானால், ஒன்று, கால்நடையாகச் செல்லவேண்டும். இன்றேல் மாட்டு வண்டியிலே போகவேண்டும். பிரயாணம் செய்கின்ற எல்லா மக்களுக்கும் மாட்டு வண்டி கிடைப்பதென்பது அவ்வளவு எளிதல்ல. எனவே பெரும்பாலான மக்கள் கால் நடையாகவே பிரயாணம் செய்து வந்தனர்.

இப்படிக் கால்நடையாகச் செல்பவர்கள் ஊர் ஊராகத் தங்கித் தங்கிக் கால்களை ஆற்றிக்கொண்டும், பசியைப் போக்கிக் கொண்டுந்தான் மேலே செல்வர். தங்கள் ஊரிலே வந்து தங்க நேரிடும் பிரயாணிகளை அந்தந்த ஊரிலுள்ளவர்கள் தங்கள் இல்லங்களிலே விருந்ினராக ஏற்று உணவு அளித்துப் போற்றினர். அத்தகைய விருந்தினர்கள்—புதியவர்கள்—கால் நடையாக வருபவர்கள்—வந்த உடன் அமர்வதற்கென்றே. அமர்ந்து இளைப்பாறுவதற்கென்றே வீட்டின் முன்புறம் திண்ணைகளைக் கட்டி வைக்கின்ற பழக்கம் நம் நாட்டில் ஏற்பட்டது.

திண்ணைகளைக் கட்டுவதோடும், ஒவ்வொரு ஊரிலேயும் பிரயாணம் செய்பவர்களை வரவேற்று உபசரிப்பதற்கென்றே சத்திரங்களையும் கட்டி வைத்தனர். இந்தச் சத்திரங்கள், தோன்றிய காலத்தில் எவ்வளவோ சீரும் சிறப்போடும் இருந்து வந்தன. நாளாக ஆகக் கவனிப்பாரற்றுச் சீர்கேடு அடையலாயின.

புலவர் ஒருவர் ஒருமுறை இப்படித்தான் கால் நடையாகப் பயணம் செய்துகொண்டிருந்தார். ஒரு நாள் மாலை நாகைப் பட்டினத்தை அடைந்தார். அடைந்த புலவர் அவ்வூரிலிருந்த காத்தான் சத்திரம் என்னும் சத்திரத்தில் தங்கினார். புலவருக்குப் பசி, சத்திரத்தில் விரைவிலேயே சோறு கிடைக்குமென்று ஆவலோடு காத்திருந்தார்.

கதிரவன் மேற்கே சென்று மறைந்து ஒளி குறைந்து வரலாயிற்று. புலவர் பார்த்தார், "இந்நேரமாகியும் சத்திரத்தில் சமையல் நடைபெறுவதாகத் தெரியவில்லையே! ஒருகால் முன்னமே ஆகிவிட்டிருக்குமா? ஆகியிருந்தால் நாம் இவண் வந்து தங்கி நெடுநேரமாகியும், சத்திரத்துக் காவலர், நம்மையழைத்து உணவு இடாமலா இருப்பார்?" என்று

**தமிழவேள்**

எண்ணிக்கொண்டிருக்கையில் ஒரு சிறு மூட்டையுடன் சத்திரத்துள் வந்து நுழைந்தார். "அந்த மூட்டை அரிசியுள்ளதாகத்தான் இருக்கவேண்டும். இனிமேல்தான் சமையல் நடைபெறப்போகிறது" என்று புலவர் புரிந்து கொண்டார்.

ஒருமணி நேரமாயிற்று, இருள் வந்து சூழ்ந்துவிட்டது, விளக்கேற்றி விட்டார்கள். ஆனால் சத்திரத்தில் புகையெழக் காணோம். உலக்கை ஒலிதான் எழுந்தது, "மட்டையாக இருக்கும் அரிசியைக் குத்துகிறார்கள் போலிருக்கிறது. இன்னும் சிறிது நேரத்தில் சமையல் தொடங்கிவிடும்," எனப் பொறுமையோடு இருந்தார் புலவர்.

ஊரெல்லாம் அடங்கிவிட்டது, எல்லோரும் உறங்கிவிட்டிருப்பார்கள். அப்போதுதான் சத்திரத்திலே புகையெழுந்தது. "சரி! அடுப்பு மூட்டியாகிவிட்டது, உலை வைத்துவிட்டிருப்பார்கள். இன்னும் ஒரு அரை நாழிக்கெல்லாம் வயிறே! உனக்குச் சோறு கிடைக்கும்! பொறு! பொறு!" என்று காயும் தன் வயிற்றுக்குச் சொன்னார்.

அரை நாழிகை என்ன? ஒரு நாழிகை ஆயிற்று! இரண்டு, மூன்று நாழிகையும் ஆயிற்று! "சோறு என்ன இன்னுமா வேகும்?" என்று புலவர் நினைத்தார். "நாம் உறங்கிவிட்டோம் என்று சத்திரத்துக் காவலன் நம்மை உணவருந்த அழைக்கவில்லையோ?" என எண்ணி, தாம் உறங்கவில்லை என்பதைக் காட்டுவான் வேண்டி ஒரு கனைப்புக் கனைத்து எழுந்து உட்கார்ந்தார். அவர் எழுந்து உட்காரவும் சத்திரத்துக் காவலன் வந்து அவரை அழைக்கவும் சரியாக இருந்தது. புலவர் எழுந்துபோய் உணவருந்திவிட்டுத் திரும்பிவந்து திண்ணையில் அமர்ந்தார்.

"ஏதோ இப்பொழுதாவது பசியாற உணவு கிடைத்ததே" என்று ஒரு புறம் புலவருடைய மனம் எண்ணினாலும், இன்னொரு புறம் சத்திரத்தில் நடந்த அந்த நிகழ்ச்சியை அப்படியே படம் பிடித்துக் காட்டியது. அந்தப் படப்பிடிப்பே ஒரு பாடலாகவும் வெளிப்பட்டது.

**கத்தும் கடல் சூழ் நாகைக் காத்தான் தன் சத்திரத்தில்**
**அத்தமிக்கும் போதில் அரிசி வரும்—குத்தி**
**உலையில் இட ஊர் அடங்கும் ஓர் அகப்பை அன்னம்**
**இலையில் இட வெள்ளி எழும்,**

"கடற்கரைப் பட்டினமாகிய இந்த நாகையில் இருக்கும் காத்தான் சத்திரத்தில் கதிரவன் மறையும் அந்தி வேளையிலே தான் அரிசி வரும், அதைக் குத்தி உலையில் இடுகின்றபோது ஊரே அடங்கிவிடும். சோறு வடித்து அதிலே ஓர் அகப்பை இலையிலே போடுகிறபொழுது வானத்தில் விடிவெள்ளியே முளைத்துவிடும்," என்னும் பொருள்படப் பாடிய அந்தப் பாடலைச் சத்திரத்துக் காவலன் கேட்டான். "புலவரை நெடுநேரம் காக்க வைத்துவிட்டோமே" என வருந்தினான். "இந்தச் சத்திரத்தில் பொழுதோடுதான் சமையல் ஆகிவிடுவது வழக்கம். என்னவோ இன்றுதான் ஐயா, இவ்வளவு நேரமாகிவிட்டது, பொறுத்தருள வேண்டும்" என்று புலவரிடம் கூறி மன்னிப்புக் கோரினான். "அதற்கு என்ன ஐயா! இருக்கட்டும். நான் பாடிய பாடலின் பொருளை நன்றாகப் புரிந்துகொண்டாயா?" என்றார். பாடலை ஒருமுறை கேட்ட உடனே பொருள் தான் புரிந்துவிட்டதே!'! என்றான் சத்திரத்துக் காவலன். "பாடலின் வெளிப்படையான பொருளைத் தான் நீ தெரிந்துகொண்டிருப்பாய்! ஆனால் உட்பொருள் என்ன தெரியுமா?" என்று புலவர் சொல்லலானார்.

"கடற்கரைப்பட்டினமாகிய இந்த நாகையிலிருக்கும் காத்தான் சத்திரத்தில், நாடெல்லாம் பஞ்சம் ஏற்பட்டு உணவுப் பொருள்கள் கிடைக்காமற்போகின்ற காலத்திலேயும், எங்கிருந்தாவது அரிசி வந்துவிடும். அதைக் குத்தி உலையில் இட்ட உடன் பசியால் வாடும் ஊர் மக்கள் எல்லாம், "காத்தான் சத்திரத்தில் உலையிலே அரிசி போட்டாகிவிட்டது. இனி நமக்குச் சோறு கிடைக்கும்" என்று ஆறுதல் அடைவார்கள். மேலும் அந்தச் சத்திரத்துச் சோறு எவ்வளவு நன்றாக இருக்கும் தெரியுமா? இலையிலே ஓர் அகப்பை அன்னம் வைத்த உடனே அதைக்கண்டால் வானத்திலே இருக்கும் வெள்ளி தான் இலையிலே வந்து முளைத்துவிட்டதோ என எண்ணும்படி அத்துணை வெண்மையாக இருக்கும்" இதுதான் அப்பாடலின் உட்பொருள் எனக்கூறிச் சமாளித்துக் கொண்டார் புலவர். அந்தப் புலவர் யார் என்கிறீர்களா? அவர்தான் காளமேகப் புலவர்.

## 2

சத்திமுற்றம் என்று ஓர் ஊர். அந்த ஊரிலே ஒரு புலவர் இருந்தார். அவரிடம் புலமை இருந்தது. ஆனால் பொருள் இல்லை. இயற்கை தானே! வறுமையோடு எப்படியோ இல்லறத்தை அவர் நடத்திக் கொண்டிருந்தார்.

மதுரையில் இருக்கும் பாண்டிய மன்னன் கொடையிற்சிறந்தவனாம்! புலவர்களுக்கெல்லாம் பொன்னையும்பொருளையும் வாரிவாரி வழங்குகிறானாம், என்று அப்புலவருடைய மனைவி கேள்விப்பட்டாள். கேள்விப்பட்டதிலிருந்து தன் கணவரை மதுரைக்குச் சென்று பாண்டிய மன்னனைப் பார்த்துவிட்டு வருமாறு வேண்டலானாள்.

மனைவியின் வற்புறுத்தலுக்கு இணங்கிய புலவர் புறப்பட்டார். கால் நடையாக நடந்து வழியில் எத்தனையோ ஊர்களில் தங்கி மதுரை நகரைப்போய்ச் சேர்ந்தார். அவர் மதுரையை அடைந்தபோது இருட்டும் வேளை ஆகிவிட்டது. இந்த இரவு நேரத்தில் ஊருக்குள் எங்கே சென்று தங்குவது என்று ஊர்ப்புறத்தே இருந்த ஒரு பாழடைந்த சத்திரத்துத் திண்ணையிலேயே பேசாமற் படுத்துக் கொண்டார்.

குளிரால் நடுங்கியபடி படுத்திருந்த புலவர் வானத்தில் இரண்டு பறவைகள் — நாரைகள் தான் அவை—பறந்து செல்வதைக் கண்டார். அந்த நாரைகளிடம், தான் மதுரை வந்து சேர்ந்துவிட்ட செய்தியைத் தன் மனைவிக்குச் சொல்லியனுப்புவதுபோல் ஒரு பாடலை இயற்றலாமே என்று அவருடைய கற்பனையுள்ளம் கூறியது. அப்படியே ஒரு பாடலும் இயற்றலானார்.

"நாராய்! நாராய்! செங்கால் நாராய்" என்று ஓர் அடியைப் பாடினார். அந்த நேரத்தில் அவ்வழியாக நகர் சோதனையின் பொருட்டு பாண்டியமன்னனே மாறுவேடத்தில் வந்துகொண்டிருந்தான். பாழடைந்த சத்திரத்துத் திண்ணையில் யாரோ படுத்திருப்பதைப் பார்த்து அரசன் சத்திரத்தை நெருங்கினான். புலவர் அவனைக்கவனிக்கவில்லை. எப்படிக் கவனிப்பார்? அவர் கற்பனையிலேயல்லவா மூழ்கி இருக்கிறார்!

**"நாராய்! நாராய்! செங்கால் நாராய்**
**பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன**
**பவளக் கூர்வாய் செங்கால் நாராய்!"**

என்று புலவர் மூன்று அடிகளைப் பாடினார். அப்பொழுதுதான் அங்கே படுத்திருப்பவர் புலவர் என்று அரசனுக்குத் தெரிந்தது. உடனே அவரை எழுப்பி அரண்மனைக்கு அழைத்துச் சென்று உபசரிக்க அவனுடைய தமிழ் உள்ளம் துடித்தது. ஆனால் புலவர் பாடும் பாடல் முழுவதையும் கேட்கும் ஆவலோடு அவர் அருகே செல்லாமல் நின்றான்.

"பனங்கிழங்கைப் பிளந்தாற் போலிருக்கும் அழகிய அலகினை உடைய நாரையே!" என்று புலவர் எதற்காக நாரையை விளிக்கிறார்? தூது அனுப்பவா? யாரிடம்? காதலியிடமோ?" என்றெல்லாம் மன்னன் எண்ணமிடலானான். அதற்குள் புலவர் மேலும் மூன்று வரிகளைப் பாடினார்:

**"நீயும் உன்பெடையும் தென்திசைக் குமரியாடி**
**வடதிசைக்(கு) ஏகுவீராயின்**
**எம்மூர் சத்திமுற்றத்து வாவியுட் தங்கி..."**

"நாரையே நீயும் உன் துணைவியும் தென்திசையிலே இருக்கும் குமரியிலே நீராடப்போகிறீர்களா? நன்று! போய் நீராடுங்கள்! நீராடிவிட்டுப் பின்னர் நீங்கள் வடதிசை நோக்கிப் பறந்து செல்வீர்களே யானால், அங்கே சத்திமுற்றம் என்று எங்களுடைய ஊர் ஒன்று உள்ளது. அந்த ஊரில் நீங்கள் தங்குவதற்கு ஒரு அழகிய குளமும் இருக்கிறது. அங்கே நீங்கள் இருவீரும் தங்கிச் செல்லுங்களேன்" என்னும் பொருள்படும் அவ்வடிகளை எண்ணி எண்ணி அரசனுடைய நெஞ்சம் பாடலை மேலே கேட்க அவாவுகிறது.

புலவர் மேலும் இரண்டு அடிகளைப் பாடுகிறார்.

**"நனை சுவர்க் கூரை கனை குரற் பல்லி**
**பாடுபார்த்திருக்கும் எம் மனைவியைக் கண்டு......"**

அந்தக் குளத்துக்குப் பக்கத்திலேயே ஒரு சிறிய வீடு இருக்கும். அந்த வீட்டுக்கு அடையாளம்

என்ன தெரியுமா? சுவர் மழையிலே நனைந்து இடிந்து கிடக்கும். அதுதான் என்னுடைய வீடு. அவ்வீட்டினுள் என்னுடைய மனைவி இருப்பாள், அவள் என்ன செய்துகொண்டிருப்பாள் தெரியுமா? "சுவரிலோ கூரையிலோ பல்லி சொல்லுகிறதா? நம்முடைய கணவர் நாளை திரும்பி வந்துவிடுவார் என்பதைத்தான் பல்லி சொல்லுகிறதா? 'என ஏக்கத்தோடு எண்ணிக் கொண்டிருப்பாள். அவளை நீங்கள் எனக்காகக் கொஞ்ச பார்த்து இந்தச் செய்தியைச் சொல்லமாட்டீர்களா?'' என்று வேண்டுவதுபோல் பாடிய அடிகளை அரசன் கேட்டான். புலவர் தம் மனைவியிடம்தான் நாரையைத் தூது அனுப்புகிறார் என்பதைத் தெரிந்துகொண்டான். "என்ன செய்தி சொல்லியனுப்பப் போகிறாரோ'' என்பதை அறிய அவன் உள்ளம் விழைகிறது.

"எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடையின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலது தழீஇ...

எனப் புலவர் தொடர்ந்தார்.

"எம்முடைய அரசனான பாண்டியனது நான்மாடக் கூடலில் ஒரு பாழடைந்த சத்திரத்தில், கட்டியிருக்கும் ஆடையைத்தவிர வேறு போர்த்திக்கொள்ள ஆடையின்றி வாடைக்காற்று வீசுவதால் உடல் நடுங்க, கைகளால் உடம்பைக் கட்டிப்பிடித்துக்கொண்டு, கால்களை மடக்கிச் சுருட்டிக்கொண்டு கிடக்கிறேன்'' என்னும் அடிகளைக் கேட்டதும் மன்னனுடைய கண்கள் கலங்கின. "இந்த நாட்டிலே ஒரு புலவருக்கு இவ்வளவு வறுமையா? ஐயோ! குளிரால் நடுங்குகிறாரே புலவர். நாம் போர்த்தியிருக்கும் கம்பளியையாவது புலவருக்குப் போர்த்தி அவர் குளிரைப் போக்கலாமே'' என அவர் அருகே செல்ல இரண்டு அடி எடுத்துவைக்கிறான். "பாடல் இன்னும் முற்றுப்பெறவில்லையே! நாம் போய்ப் போர்த்திய உடன் பாடல் அத்துடன் நின்றுதானே விடும். அவர் அதை முடித்துவிடட்டும்.'' என மன்னன் தயங்கி நிற்கிறான்.

"பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்
ஏழையாளனைக் கண்டனம் எனுமே!''—

பெட்டியிலே அடைபட்டுக் கிடக்கும்பாம்பை ஒத்துச் சுருண்டு படுத்துக் கிடக்கும் ஒரு ஏழையாளனை நாங்கள் பார்த்தோம் என்று நாரைகளே! என் மனைவியிடத்திலே அன்பு கூர்ந்து சொல்லுங்களேன்!'' என்னும் பொருள்படப் புலவர் பாடலை முடிக்கிறார்.

மன்னன் உடனே ஓடிச்சென்று தன் கம்பளிப் போர்வையைப் புலவருக்குப் போர்த்தி, "ஐயா! குளிருக்கு இந்தப் போர்வையைப் போர்த்திக்கொள்ளுங்கள். நான் காலையிலே வந்து உங்களைப் பார்க்கிறேன்.'' என்றுமட்டும்சொல்லித், தான் இன்னான் என்பதைத் தெரிவிக்காமல், குளிரால் நடுங்கியபடியே அரண்மனைபோய்ச் சேர்ந்தான். மறுநாள் காலையில் ஏவலாளரை அனுப்பிப் புலவரை அழைத்துவரச் செய்து உபசரித்து அவருடைய வறுமையைக் களைந்து பெருந்திரளான செல்வத்தோடு அவரைச் சத்தி முற்றத்துக்கு அனுப்பிவைத்தான் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

## 3

காளத்தியப்பர் என்று ஒரு செல்வர், திருநின்ற ஊரிலே வாழ்ந்துவந்தார். அவர் மிகுந்த தமிழ்ப்பற்று உடையவர். தமிழ்ப் புலவர்கள் அனைவரும் வறுமையின்றி வாழ்வதைக் காணவேண்டும் என்னும் பேராவல் கொண்டவர். எனவே தம்மை நோக்கி வருகின்ற புலவர்க்கெல்லாம் பொன்னையும் பொருளையும் வரையாது வழங்கிவந்தார். அவருடைய புகழ் நாடெங்கும் நாள்தோறும் பரவி வளர்ந்துவரலாயிற்று.

மதுரகவிராயர் என்றொருபுலவர். அவருடைய வறுமை சொல்லிமுடியாது. நெடுநாட்களாக வறுமை அவரை வாட்டிக்கொண்டே வந்தது. எவ்வளவு முயன்றும்அவரை விட்டு அந்தப் பொல்லாத வறுமை போவதாகக் காணோம். இப்படியிருக்கையிலேதான், காளத்தியப்பருடையபுகழ்அவருடைய காதுக்கு எட்டியது. தாமும் காளத்தியப்பரைப் போய்ப்பார்த்தால் தம்மிடமுள்ள வறுமை அகன்றுவிடும் என எண்ணியவராய் அவர் திருநின்ற ஊருக்குப் புறப்பட்டார்— கால்நடையாகத்தான்!

பல நாட்கள் நடந்து பல ஊர்களிலே தங்கி, திருநின்ற ஊருக்கு அண்மையில் உள்ள ஒரு சிற்றூரை ஒருநாள் மாலை அடைந்தார். அன்று இரவு அவ்வூர்ச் சத்திரத்தில் படுத்திருந்துவிட்டு மறுநாள் காலையில் திருநின்ற ஊர்ப் போய்ச் சேரலாம் எனப் புலவர் அங்கே தங்கினார்.

புலவர் படுத்தபடியே எண்ணமிடலானார். "அப்பப்பா! இந்த வறுமைதான் எவ்வளவு கொடியது! "இன்மையின் இன்னாதது யாதெனில், இன்மையின் இன்மையே இன்னாதது'' என்று திருவள்ளுவர் சொல்லியிருப்பதுதான் எத்துணை உண்மை! ஓராண்டா? ஈராண்டா? எத்தனை ஆண்டுகளாக நம்மை இந்த நல்குரவு விடாமல் பற்றிக்கொண்டிருக்கிறது, நாளை திருநின்ற ஊரை அடைந்து காளத்தியப்பரைக் காணப் போகிறோம். நாளையோடு இந்த வறுமை நம்மை விட்டுப் போகவேண்டியதுதான். இனி நமக்குக் கவலை இல்லை'' என்கின்ற இனிய நினைவுகளிலே ஈடுபட்டிருந்த புலவருக்கு ஒரு பாடல் பாட விருப்பமேற்படுகிறது. அந்த எண்ணத்தையே ஒரு பாட்டாகப் பாடலானார்.

"நீளத்திரிந் துழன்றாய் நீங்கா நிழல்போல
நாளைக் கிருப்பாயோ, நல்குரவே?—காளத்தி
நின்றைக்கே சென்றக்கால்
நீயெங்கே? நானெங்கே?
இன்றைக்கே சற்றே இரு"

"ஏ! வறுமையே! நிழலைப்போல் அல்லவா இத்தனை நாளும் நீ என்னை விடாமம் தொடர்ந்து வந்தாய்! நாளைக்குக் கூடவா நீ என்னோடு இருக்கப்போகிறாய்? இருக்கமாட்டாய்! காளத்தியப்பர் வாழும் திருநின்ற ஊருக்குச் சென்ற

### சோவியத் பத்திரிகைகளின் முன்னேற்றம்

தற்பொழுது சோவியத் யூனியனில் 7685 செய்திப் பத்திரிகைகளும் 3824 சஞ்சிகைகளும் உள்ளன. இவற்றிலும், சோவியத் ரேடியோ, டெலிவிஷன் நிலையங்களிலும் சுமார் 60,000 பத்திரிகை எழுத்தாளர்கள் உள்ளனர்.

சோவியத் யூனியனின் செய்திப் பத்திரிகைகளின் புழக்கம் 1913-குப் பிறகு 18 மடங்கு அதிகரித்துள்ளது. உதாரணமாக "பிராவ்தா''வின் விநியோகம், ஜார் கால இரஷ்யாவில் வெளியான எல்லாப் பத்திரிகைகளின் மொத்த விநியோகத்தைவிட இருமடங்காகும்.

உடனே நீ எங்கேயோ! நான் எங்கேயோ? இன்று ஒரே ஒரு நாள் தான் நீ என்னோடு இருக்கலாம்! இன்னும் சற்று நேரம், பாவம், பொழுது விடியுமட்டும் என்னோடிருந்துவிட்டுப்போ!" என்னும் பொருள்படப் பாடிய பாடலை அவருக்கு அருகிலே படுத்திருந்த மற்றொரு வழிப்போக்கர் கேட்டார். கேட்டுக் கண்ணீர்விட்டார்! அந்த வழிப்போக்கர் வேறு யாருமல்ல! காளத்தியப்பரேதான்!

காளத்தியப்பருடைய புகழ் நாடு முழுவதும் பரவி வருவதைக் கண்ட அந்த நாட்டு அரசன் பொறாமையால் அவரிடமிருந்த செல்வத்தையெல்லாம் பறித்துக் கொண்டான். எனவே, அவர் தம்முடைய ஊரைவிட்டு எங்காவது கண்காணா இடத்தில் போய் வாழலாம் எனப் புறப்பட்டு விட்டார். வழியிலே அன்று இரவு புலவரைப் போன்று அந்தச் சத்திரத்திலே தங்க நேரிட்டது. தங்கிய இடத்திலேதான் அந்தப் பாடலைக் கேட்டுக் கண்ணீர் விட்டார்.

"புலவர் எவ்வளவு ஆர்வத்தோடும் நம்பிக்கையோடும் நம்மைக் காணவருகிறார்! "திருநின்ற ஊரில் வாழும் காளத்தி" என்னாமல் காளத்தி வாழும் திருநின்ற ஊர் காளத்தி நின்றை—என்றல்லவா குறிப்பிடுகிறார்! நம்மிடம்தான் அவருக்கு எத்துணை மதிப்பு! எத்தனை காலமாக வறுமையில் வாடுகிறாரோ? நிழலைப்போல் அல்லவா வறுமை அவரைத் தொடர்கிறதாம்! அத்தகைய வறுமையைப் பார்த்து, "நின்றைக்கே சென்றக்கால் நீ எங்கே? நானெங்கே?" என்கிறாரே! அதிலேதான் எவ்வளவு நம்பிக்கை தெரிகிறது!" என்றெல்லாம் நினைக்கலானார். "பாவம்! புலவருக்கு நம்முடைய தற்போதைய நிலைமை தெரியாது போலும்! எப்படி இருப்பினும் இவ்வளவு நம்பிக்கையோடு வரும் புலவரை நாம் போற்றியாகவேண்டும்," என்று பொழுது புலருமுன்னமே தம் ஊர் திரும்பினார். தம் மனைவி அணிந்திருந்த ஒரு சில நகைகளை விற்றுப் புலவரை வரவேற்கக் காத்திருந்தார். புலவரும் மறுநாள் போய்ச் சேர்ந்து பரிசில்களைப் பெற்றார்.

புலவர் நினைத்தபடி அன்று வறுமை எங்கேயோ இருக்க, புலவர் எங்கேயோதான் இருந்தார்!

# பற்றற்ற வாழ்வு

—(கனகு)—

இரவு முழுதும் நல்ல மழை. இடைவிடாத மழை. இரவில் மழை பெய்துகொண்டிருக்கும்போது தூக்கம் நன்றாக வரும் என்று சொல்வார்கள். என் அனுபவத்திற்கூட அதை நான் கண்டிருக்கிறேன். ஆனால், அன்று எனக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. அளவு மீறிய நினைவலைகள்தாம் அதன் முன்னிலை. படுக்கையினின்றும் எழுந்து அமர்ந்தேன். "சோ" வென்ற மழையின் ஓசை, நினைவை மாற்றி உள்ளத்தைக் கிடுகிடுக்க வைக்கும் இடியின் பேரொலி, மூடியிருந்த சன்னலில் இடுக்குகள் வழியே உள்ளே ஒளியைப் பாய்ச்சி கண்களை வெட்டிப் பறிக்கும் மின்னல்.

அணைத்து வைத்திருந்த விளக்கை மறுபடியும் ஏற்றினேன். அறையில் பலவிடங்களில் மழைநீர் ஒழுகிக்கொண்டிருந்தது. புத்தகங்களின் மீதும் துணிகளின் மீதும் மழைநீர் விழுந்திருந்தது. எல்லாவற்றையும் எடுத்து ஒதுக்கி வைத்தேன்.

மழை பெய்துகொண்டே இருந்தது. மின்னல் மின்னியது. இடி இடித்தது. அந்த நிலையில் சன்னலைத் திறக்கவேண்டிய அவசியம் இல்லை. திறந்து பார்த்தாலும் ஒன்றையும் காணமுடியாது;—காரிருள், பேரிருள் சூழ்ந்து கவிந்திருக்கும் அந்த வேளையில்.

உள்ளுணர்வு என்னைச் சும்மா அமர்ந்திருக்கவிடவில்லை. சன்னலருகிற்சென்றேன் ... இலேசாகத் திறந்தேன். எதிர்பார்த்த கரும் பேரிருள்தான்.

சன்னலுக்கு நேரே எதிர் வரிசையில் ஓர் ஓட்டுத் திண்ணை. அங்கிருந்து இலேசான பேச்சொலி—முனகல் ஒலி கேட்டது. என்னால் நம்ப முடியவில்லை—அந்த ஓட்டுத் திண்ணையில், அந்த வேளையில் யாரும் இருப்பார்கள் என்று.

மின்னல் மின்னி வெட்டியது. அந்த மின்னலில் ஓட்டுத்திண்ணை பளிச்சிட்டது. அங்கே ஒருவர், இருவர் அல்லர். ஒரு கூட்டமே இருந்தது. ஒண்டி, ஒடுங்கி, சுருண்டு, முடங்கிக்கொண்டு கிடந்தது அந்தக் கூட்டம். நாலைந்து பெரியவர்கள், ஏழெட்டுக் குழந்தைகள், நாய்கள் இரண்டு, எருதுமாடு ஒன்று—இத்தனை உயிர்களும் அங்கே ஒதுங்கிக் கிடந்தன.

மாறி மாறி, சீறிச்சீறி வீசிய காற்றையே எளிதாக எண்ண முடியாது. அந்தக் காற்று உந்திவந்த மழைத்துளி, கூரையைப் பொத்துக்கொண்டு, சுவரைத் தாண்டிக்கொண்டு எதையுமே நனைக்கும் ஆற்றல் படைத்த மழைத்துளி, அந்த ஓட்டுத் திண்ணையைவிட்டு வைக்குமா? அங்கே ஒதுங்கிக்கிடப்போர் மாந்தர் என்ற காரணத்தால் அவர்மீது பட்டு நனைக்காமல் போய்விடுமா?

பெரியவர்கள் ஒவ்வொருவரும் கிழிந்த கோணிகளையும்' பாய்களையும், துணிகளையும் போர்த்தபடி சுருண்டு, ஒரு மூட்டையெனக்கிடந்தார்கள். அங்கே அவர்களின் மழலைச் செல்வங்கள் அவர் தம் வயிற்றை ஒட்டிக்கொண்டு நடுங்கியவண்ணம் ஒடுங்கிக்கிடந்தன. இரக்கமில்லாத மழைத்துளி 'வயிற்றையும், முகத்தையும் மறை

துக்கொண்டால் உங்களை விட்டு விடுவேன்' என்று அதட்டி அச்சுறுத்தும் வகையில் பேரொலியும், பேயொலியும் செய்து அவர்களின் முதுகையும் கால்களையும் தலையையும் நனைத்துக்கொண்டே இருந்தது.

அவர்களிடம் அப்பாடுக் கொண்ட காரணத்தால், அவர்கள் வளர்த்துவரும் அந்த எருதும், நாய்கள் இரண்டும் அவர்களின் அந்தத் துன்பத்தைத் தாமும் வலிந்து ஏற்றுக்கொண்டிருந்தன.

அவர்களுக்கு இந்தத் துன்பம் இயல்பாகிவிட்டது. அது பட வேண்டிய துன்பம், தவிர்க்கமுடியாத துன்பம் என்பது அவர்கள் முடிவு. மழைபெய்துகொண்டிருக்கும்போது மட்டுந்தான் மழையைப் பற்றி அவர்கள் நினைக்கிறார்கள். காய்ந்துகொண்டிருக்கும் வேளையிற்கூட வெயிலின் வெம்மையை அவர்கள் உணர்வதில்லை. அப்படித்தான் காற்றும், குளிரும்.

இந்த வாழ்வை அவர்கள் வெறுக்கவில்லை. வெறுப்பதில்லை. மாறாக இது வழிவழி வந்த உரிமை வாழ்வு என்று போற்றுகின்றார்கள். அதை அவர்கள் செய்கை மெய்ப்பிக்கின்றது. தாங்க முடியாத குளிர் வேளையிலும்கூடப் பழக்கப்பட்டவன் தண்ணீரில் குளித்துவிட்டு, நடுக்கம் ஏதுமில்லாமலே கரை ஏறுவான். அவனை வேடிக்கை பார்ப்பவனோ—உடலைத் தாக்கவில்லையென்றாலும்—அப்பெருங்குளிர் உள்ளத்தை அழுத்திக்கொண்டிருப்பதால் நடுங்கிக் கொண்டு நிற்பான. இதுபற்றித்தான் ஆன்றோர்கள் கூறியுள்ளார்கள் போலும் "துன்பத்தைத் துய்த்துக் கொண்டிருப்பதைவிட, துன்பம் என்று எண்ணிக்கொண்டிருப்பதுதான் மிகவும் துன்பம் தருவது" என்று.

மறுநாள் காலையில் அலுவலகம் போய்க்கொண்டிருந்தேன். இரவு முழுதும் பெய்த மழையால் பாட்டையெங்கும் சேறும், சகதியுமாக இருந்தது. ஆங்காங்கு பள்ளங்களில் தேங்கி நின்ற கலங்கல் நீர் வெயில் ஒளியில் பளிச்சிட்டுக் கொண்டிருந்தது. வானமோ மேகத்தின் சுவடே தெரியாமல் வெளி வாங்கியிருந்தது. அந்த நாடோடிக் கும்பல் ஆங்கொரு பொட்டல் மேட்டில் தங்கள் துணிகளையும், பொருள்களையும் உலரப் போட்டுக் கொண்டிருந்தது. இரவு பெய்த மழையின் நினைவு அவர்களுக்கு இருக்குமா என்ன!

மாலையில் தெரு வழியே வந்து கொண்டிருந்தேன். வீதியையொட்டிய வெட்ட வெளியொன்றில் அவர்கள் வேடிக்கை காட்டிக் கொண்டிருந்தார்கள். அவர்களின் அன்றாட வாழ்க்கையில் முக்கியமான கட்டம் இது. — அவர்கள் வாழ்க்கையின் உயிரோட்டமே இதுதான். அவர்கள் கலைஞர்கள் அல்லர். அறிவாற்றல் நிறைந்தோருமல்லர். ஆண்டாண்டு காலமாக அவர்கள் காட்டி வந்த வேடிக்கைகளைத்தான் இன்றும் செய்து வருகின்றனர். அவர்தம் வேடிக்கையைக் காணுவதற்கு மக்கள் கூட்டம் திரண்டு வருவதில்லை. அதற்காக யாரும் போய்ப் பார்க்காமல் இருப்பதுமில்லை. அவர்களுக்கு யாரும் அள்ளி அள்ளிக் கொடுப்பதில்லை. ஆயினும் வழங்காமல் இருப்பதுமில்லை. சிற்றூர் என்றும் பேரூர் என்றும் வேறுபாடு கருதாமல் எங்கெங்கும் போய்க்கொண்டிருக்கிறார்கள் அவர்கள். புகலிடமும் கிடைத்துக் கொண்டிருக்கிறது. இறந்த காலத்தைப்பற்றி எண்ணுவதில்லை அவர்கள். வருங்காலம் ஒன்று உளது என்பதையே அவர்கள் அறியமாட்டார்கள்.

அவர்கள் ஊர் ஊராகச் சுற்றியலைந்துகொண்டிருக்கின்றனர். ஆயினும் மனைவியும், மக்களும், சுற்றமும் இல்லாமலில்லை அவர்களுக்கு. பற்றற்று வாழ்கின்றார்கள். எனினும் துறவியர் அல்லர்.

அவர்கள் எங்கே செல்கிறார்கள் என்பதை யாரும் அறியார் என்பது விந்தையல்ல. அதை அவர்களே அறியார். எங்கிருந்து வருகிறார்கள் என்பதும் அவ்வாறே. "நாட்டிலுள்ளோரே, நீங்கள் அடிக்கடி உங்கள் வாழ்க்கையை மாற்றிக் கொண்டும் மாறிக்கொண்டும் போகிறீர்கள். நாங்களோ எப்போதும்போல் வாழ்ந்துகொண்டே இருக்கிறோம்" என்று கூறாமல் கூறிக்கொண்டு, தாமரை இலைத் தண்ணீரென இன்பத்திலும் துன்பத்திலும் பற்றற்ற வாழ்வு வாழ்வோராக உள்ளனர்.

★

---

3-ம் பக்கத் தொடர்ச்சி

வந்தது வெட்கக்கேடான செயல் என்றுமல் வேறு என்னென்பது?

புகழ்பாடுவோர், அவர் புகழை மட்டும் எண்ணி எண்ணி இறும்பூதெய்திவிட்டால் மட்டும் போதுமா? அவர் ஆட்சியில் நடக்கின்ற ஊழல்களையும் ஊதாரித்தனங்களையும் எடுத்துக்காட்டி இடித்துரைக்காவிட்டாலும், இனிய மொழிகளாலாவது இருக்கின்ற கேட்டினை எடுத்துக்கூறி நாட்டின் தரத்தையும் மானத்தையும் பறிபோகாமல் செய்யவேண்டாமா?

இந்த உபகண்டத்திலும் வெளிநாடுகளிலும் நடைபெறுகின்ற ஊழல்கள் உண்மையிலேயே நாட்டுக்கும் அதன் தலைவருக்கும் ஏற்படுகின்ற ஒரு பெரும் இழுக்காகும் என்பதனை அவர் புகழ்பாடுவோர் நிச்சயம் உணரவேண்டும்.

ஒரு சனநாயக நாட்டில் ஊழல்கள் நடைபெறுகின்றன என்றால், அங்கு சனநாயகம் கொலை செய்யப்படுகின்றதென்றுதான், சனநாயகத்தின் உண்மையான பொருளுணர்ந்தோர் கூறுவர்.

எனவே, நல்லாட்சி நடைபெற—நாட்டின் தரம் உயர — தலைவரின் புகழ் நிலைக்க — ஓங்கவேண்டுமானால், அந்த நாட்டின் ஆட்சியில் அலங்கோலங்கள் ஏற்படாது பார்த்துக் கொள்ளவேண்டிய பெரும் பொறுப்பு அந்த நாட்டின் தலைவனையே சார்ந்திருக்கிறதென்பதனை எவரும் எடுத்துக்காட்டத் தேவையில்லை. அதே சமயத்தில், நாட்டில் நடைபெறும் தவறுகளைத் தலைவனுக்கு எடுத்துக்கூறி, அதனைத் திருத்தும்படி செய்வது மக்களின் கடமையாகும். வறிதே புகழ் பாடிக்கொண்டிருந்தால் மட்டும் போதாது. இதனை, புகழ் மட்டும்பாடி அதன் வாயிலாக நல்லவர்களாகலாம் என்றெண்ணுவோர் உணர வேண்டும்.

# இரண்டாம் நாள்

தில்லை — அரசன்

அன்று அத்திங்களின் இரண்டாம் நாள். அன்று ஞாயிற்றுக் கிழமையாதலால், விடுமுறைநாளும் கூட. இளவெயில் காய்ந்துகொண்டிருந்தது. குடிசைவாழ் மக்கள் பலரும் பழம் பாய்களையும் ஓலைத் தடுக்குகளையும் வெளியே மண் தரையில் விரித்து அமர்ந்து கொண்டிருந்தனர். அன்று அவர்களுக்கு அமைதியான நாள். ஊதியம் கிடைத்த மறுநாள் ஆகையால், அன்று அவர்களுடைய வீடுகளில் விருந்துச் சாப்பாடும் உண்டு. ஆண், பெண், குழந்தைகள் அடங்க அனைவரும் இளையாதித்தனின் செய்கையால் ஒரு பெரும் தொல்லை நீங்கிற்றென்று அவனுக்கு உளமார நன்றிசெலுத்திக் கொண்டிருந்தனர்.

இளையாதித்தன் அன்று அதிகாலையிலேயே எழுந்திருந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டான். தன்னுடைய மண்குடிசைக்கு எதிரில் கிளுவைச் செடியினால் வேலி அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தான். தன் வீட்டிற்கு எதிரே சிறிய தோட்டம் ஒன்று அமைப்பது அவனுடைய எண்ணமாக இருந்தது. அப்போது அவனைத் தேடி அருளப்பரும் மற்றும் சில தோழர்களும் அங்கு வந்தனர். அனைவருக்கும் அவன் நல்வரவு கூறினான். அண்மையிலிருந்த புல் தரையில் அனைவரும் அமர்ந்தனர். பின்னும் சில முதிய மாதர்களும், இளம் குழந்தைகளும் அவர்கள் இருந்த இடத்தை நோக்கி வந்தனர்.

"நேற்றிரவு ஒன்பது மணிக்கு உன் வீட்டிற்கு வந்திருந்தேன். இங்கு யாரும் இல்லாததனால் திரும்பிவிட்டேன்" அருளப்பர் பேச்சைத் துவக்கினார்.

"ஆமாம், நேற்று நான் வீடு திரும்ப வெகுநேரம் ஆகிவிட்டது. ஏதாவது கலவரம் நிகழ்ந்துவிடக் கூடாதுஎன்று தொழிற்கூடத்தில் பாலத்தடியிலே காத்திருந்தேன். பிறகு அங்கிருந்து வீடு திரும்பும் வேளையில் பிரிமணைப்பாகைக்காரனின் கணக்கர் ஒருவர் வந்தார். அவருடன் போயிருந்தேன்." ஆதித்தன் கூறினான்.

"ஆதித்தரே, உம்முடைய உதவிக்கு நாங்கள் என்ன கைம்மாறு செய்யப்போகிறோம்," இளவரசன் என்னும் நண்பன் உணர்ச்சிப் பெருக்குடன் கூறினான்.

'உண்மையில் நன்றிக்குரியவள் அருளப்பரின் மகள் தேமொழி ஆவாள், அவள் தனது கைத்திறமையினால் அவ்வளவு சிறந்த உருவம் செய்திருக்காமற்போனால், அந்தப் பட்டாணியன் பயந்திருக்கவே மாட்டான்." ஆதித்தன் மொழிந்தான். அவனுடைய பேச்சிலே தெளிவும், உறுதிப்பாடும் இருந்தன.

'நீங்கள் கூறுவது உண்மை ஆதித்தரே! அவனுடைய இடது கன்னத்தில் இருந்த மச்சம்கூட அவள் அமைத்த உருவத்தில் இருந்தது. அதைக் கண்டதும் தன்னையே கண்ணாடியில் கண்டது போல் திடுக்கிட்டுப்போனான் அந்தத் தீயோன்" மாநாய்கன் என்னும் தோழன் ஆதித்தனின் கூற்றை ஆமோதித்தான்.

"அதுசரி தம்பி! நேற்று நீ எங்கேபோயிருந்தாய், என்று இன்னும் எங்களுக்குக் கூறவில்லையே!" அருளப்பர் கேட்டார்.

'அதை இப்போது சொல்லுவேன் ஐயா" ஆதித்தன் பணிவுடன் கூறினான். "அந்தக் கணக்கர், நகரத்தில் தங்கள் எசமானர்கள் வாழும் பகுதிக்கு அழைத்துச் சென்றார். அந்த மனைகளில் பொன்னும் வெள்ளியும் பளபளத்தன. நமது வீடுகளில் நமக்கே உடுக்கத் துணியில்லை. அங்கே மேசை, நாற்காலிகளும், கதவு வழிகளும், சாளரங்களும் பட்டுத்துணி போர்த்து நிற்கின்றன. அங்கேயுள்ள பொருள்களின் பெரும்பகுதி நமது அரிய உழைப்பினால் வந்தவை என்பதை எண்ணியபோது, என் உள்ளம் குமைந்துபோயிற்று. அவர்கள் வளர்த்த நாய்கூடக் கொழுப்பேறியிருந்தது."

"அந்தப் பகுதிக்கு நீ தனியாகவா போனால் தம்பி?" அருளப்பர் கனிவுடன் கேட்டார். அவருடைய விழிகள் பளபளத்தன.

"பொது நன்மையை முன்னிட்டுப் புலிவாழும் பிலத்தினுள்கூடப் புகலாம் ஐயா, அவர்களிடம் செல்வம் இருக்கிறதே தவிர, உள்ளத்திடம் கிடையாது. அவர்களால் என்னை ஒன்றும் செய்ய இயலாது"

"அவர்கள் என்னதான் கூறினார்கள்?" இளவரசன் வினவினான்.

"என்னிடம் நயமாகப் பேசினார்கள். கையூட்டுத் தருவதாக ஆசை காட்டினார்கள். அச்சுறுத்திப் பார்த்தார்கள். முடிவில் நான் ஒரு திட்டத்தை அவர்கள் முன்பு வைத்தேன், அதில் உறுதியுடன் நின்றேன். இறுதியில் அவர்கள் அதை ஒப்புக்கொண்டார்கள்."

"என்ன திட்டம் அது?"

இதுவரை வாங்கிய கடன் தொகையைப்போல வட்டியின் மூலமாக இருமடங்கு திருப்பிவிட்டவர்களிடமிருந்து இனித் தொகை எதுவும் பெயராது. மற்றவர்கள் முதலை மட்டும் பத்துத் தவணைகளில் திருப்புவார்கள். வட்டியே கிடையாது. இனி அவர்கள் கணக்குகளையெல்லாம் நமக்குப் புரிகிற மொழியிலேதான் எழுத வேண்டும்."

"நீ செய்தது பெரிய உதவி தம்பி, ஆனால் கடன் வாங்காமல் நம்மால் வாழமுடியவில்லையே!" அருளப்பர் கூறினார்.

ஆதித்தன் சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்தான். பிறகு தெளிவான குரலில் பேசத்தொடங்கினான். "உலகத்தில் தேவைக்கேற்ற வருமானம் மிகச் சிறுபான்மையருக்கே கிடைக்கிறது. வாழ்க்கையும் வருமானமும் என்றுமே இணையாத இருப்புப்பாதைகளாகத்தான் இருக்கும். ஒரு மனிதன் ஐம்பது ரூபாயிலும் வாழலாம். ஐயாயிரம் ரூபாயிலும் வாழலாம். ஆனால் தமது வருமானத்திற்குள் மக்கள் வாழாவிட்டால், வாழத் தெரிந்து கொள்ளாவிட்டால்; வாழ்க்கை தீயின் முன்வைத்த துரும்புபோல் ஆகிவிடும். இந்த நீதி தனி மனிதனுக்கு மட்டும் அல்ல, ஒரு நாட்டிற்கும் பொருந்தும். மக்கள் சமுதாயத்தில் பலர் அடிப்படைத் தேவைகளைக்கூட நிறைவுசெய்துகொள்ள முடியாமலும், மற்றும் சிலர் பெ

ழிதவாழ்வு வாழ்வதற்கும் காரணம் நாம் நமது வாழ்க்கையைத் திட்டமுடன் அமைத்துக்கொள்ளாததுதான். செல்வமுடையவர்களும் எளிய வாழ்வு நடத்தவேண்டும். ஆடம்பர வாழ்க்கை களவையும், பொய்மையையும் விடத் தீமை பயப்பதாகும்.''

கேட்பதற்கு இந்தத் தத்துவம் நன்ருகத்தான் இருக்கிறது. என் ருலும், குடும்பத்தில் ஒரு திருமணம், சாவுபோன்ற செலவுள்ள நிகழ்ச்சிகள் நேரலாம். அந்த வேஃளகளில் கடன் வாங்கியே தீரவேண்டியிருக்கிறது!''

ஆதித்தன் முறுவலித்தான். "பண்டைய நாட்களிலும் நம்மிடையே திருமணங்கள் நடக்கத்தான் செய்தன. மக்கள் மரிக்கவும் செய்தார்கள். அப்போதெல்லாம் இவர்கள் வந்து நமக்குக் கடன் கொடுத்து வந்தார்களா?'' அது சரி, அழகன் எங்கே? இன்று அவரைக் காணேமே, அன்புடன் வினவிஞன் ஆதித்தன்.

மாநாய்கனும் இளவரசனும் ஒருவரை ஒருவர் பொருளுள்ள பார்வையால் பார்த்துக் கொண்டனர். இதற்குள் இவர்கள் கூடியிருந்த இடத்திற்கு இன்னும் சில நண்பர்களும் வந்தார்கள். "அழகன் எங்கே?'' என்று ஆதித்தன் அவர்கஃளயும் கேட்டான்.

அருளப்பர் தஃலகுனிந்தவாறு விடையிறுத்தார். "நேற்று ஊதியம் கிடைத்ததல்லவா? இரவு வெகுநேரம் வரை கண் விழித்திருப்பான். இன்னும் உறங்குகிருன்போல் இருக்கிறது. அது ங்களிடையே வழக்கம்தான்.''

"அழகன் நேற்றிரவு எங்கே இருந்தான் என்று எனக்குத் தெரியும்,'' ஆதித்தன் அமைதியுடன் றிஞன். அதுமட்டும் அல்ல; ங்களில் பலபேரும் நேற்று நள்ளிரவுக்குமேல் என்ன செய்தீர்கள் ன்பதையும் நான் அறிவேன்.''

பலர் தஃலயைக் குனிந்து லத்தை நோக்கினர். ஆதித்தன் தைக் குறிப்பிடுகிருன் என்பதை வர்கள் அறிந்தே இருந்தனர்.

"தனி மனிதர்களுடைய உரிமையில், அவர்களுக்கு மகிழ்ச்சி தரும் பொழுது போக்குகளில் அரசாங்கம் தஃலயிடக்கூடாது என்று ன் உறுதியாக நம்புபவன். என ருலும் நாம் அஃனவரும் வள்ளுவரின் பொன்னூஃல வாழ்க்கையில் கடைபிடிக்கத் தெரிந்துகொள்ளும் வரையில் அரசாங்கம் விதிக்கும் கட்டுத் திட்டங்கஃளயும் நான் வரவேற்கவே செய்கிறேன்''.

அங்கு குழுமியிருந்தவர்களில் சிறப்பாகப் பெண் மக்கள் ஆதித்தனின் முகத்தை மகிழ்ச்சியுடன் நோக்கிஞர்கள். ஆதித்தன் தொடர்ந்து பேசிஞன். "நான் தூயவன் என்ருே, திறமையுள்ளவன் என்ருே உங்களிடம் வாய் வீச்சு வீச வரவில்ஃல. ஆஞல் என் மொழி பேசும் மக்கள் விலங்குகளிலும் கேவலமாகத் தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதஃல தவறிக் கெட்டுப் பாழ்பட்டு நிற்கும்போது என் உள்ளம் பொருமல் உங்களுக்குத் தொண்டு செய்ய முன்னிற்கிறேன், அதில் நிறைவு காண்கிறேன். நீங்கள் விரும்பிஞல் உங்களிடையே பணிபுரிவேன். இல்ஃலயாஞல் என் வழி செல்லுவேன்''. அவனுடைய சொற்களில் உணர்ச்சி துடித்தது.

"நான் பல நாடுகளுக்குச் சென்றிருக்கிறேன். பல மொழிகள் பயின்றதுண்டு. ஆஞல் முப்பாஃல விட உயர்ந்ததொரு நூஃல இன்னும் காணவிருக்கிறேன். அத்தகைய உயர்ந்த நூலில் தாயின் தன்மை குறித்து வள்ளுவர் பேசுகிருர். அதில் கள்ளுண்ணுமை என்னும் அதிகாரத்தில்.

**ஈன்ருள் முகத்தேயும் இன்ஞதால் என்மற்றுச் சான்ருேர் முகத்துக் களி.**

என்று உளம் நொந்து கூறுகிருர். தொடக்க நாளில் இருந்து தமிழன் கள்ளுண்ணுதஃலப் பெரும் தீய செயலாகக் கருதிஞன். வேற்றினத்தினர் புகுந்து வேள்விகஃளக் காரணம் காட்டி இத்தீய செயஃல இந்நாட்டில் புகுத்திஞர்கள். கள்ளுண்ணல் நம்மினத்துக்குக் புறம்பானதொன்று. அதுவும் அரசாங்கம் தடை செய்திருக்கும் ஒரு தீய செயஃல மறைவாகச் செய்வது நம் உள்ளத்தையே ஏய்ப்பதாகும். "துஞ்சிஞர் செத்தாரின் வேறல்லர், என்று இகழ்ந்து கூறுகிருர் செந்நாப்போதார். நம் இனம் உயர்வு பெறவேண்டுமாஞல் நாம் இத்தீய செயஃலத் தவிர்த்தே ஆக வேண்டும்.'' ஆதித்தன் சிறிது நேரம் இஃளப்பாறிஞன்.

"நேற்று என்ன நடந்ததென்று உண்மையைக் கூறிவிடுகிறேன் அண்ணே!'' நாங்கள் நிசி வேஃளயில் சாராயம் காய்ச்சி அருந்திக் கொண்டிருக்கும்போது அங்கே படையினர் நால்வர் எங்கஃளச் சூழ்ந்துகொண்டனர். உடனே அங்கிருந்து நாங்கள் தப்பி ஓடிஞேம். நண்பர் அழகன் மட்டும் அங்கு மயங்கிக்கிடந்தான். மறுபடியும் அதிகாஃலயில் சென்று அவஃனச் சுமந்து கொணர்ந்து அவன் வீட்டில்விட்டு வந்தோன்.'' இளவரசன் கூறிஞன்.

"ஆம், நான்தான் அவர்கஃள அழைத்துவந்தேன். ஆஞல் அவர்கள் காவல் படையினர் அல்லர். நாங்கள் அந்த மாறுவேடத்தில் இருந்தோம். நீங்கள் அஃனவரும் ஓடிய பிறகு அந்த இடத்தில் எனக்கு ஒரு தடயம் கிடைத்தது. அது என்ன தெரியுமா?'' ஆதித்தன் கேட்டான். அஃனவரும் அவன் முகத்தை ஆவலுடன் நோக்கினர். ஆதித்தன் தன் வீட்டினுள் சென்று ஒரு துணியை எடுத்துக்காட்டிஞன்.

அது கையினல் நூற்று நெய்த மேல் துண்டு.

"இதுமட்டுமல்ல. இது யாருடையது என்பதையும் அதில் உள்ள சலவைக்குறியிலிருந்து தெரிந்து கொண்டுவிட்டேன். நகரத்தில் எத்தஃன பசுத்தோல் போர்த்த புலிகள் இந்தச் செய்கையை ஊக்குகின்றன என்பதையும் நான் அறிவேன். அவர்கஃளப் பாதுகாக்கப் பணமும் பதவியும் உள்ளன. நம்மை அவர்கள் கம்பி எண்ண வைத்து விடுவார்கள். அது நிஃனவில் இருக்கட்டும்.'' ஆதித்தன் உருக்கமுடன் பேசிமுடித்தான்...

...இஃளயாதித்தன்மேற்கொண்ட முயற்சிகளிஞல் அந்தத் திங்கள் இரண்டாம் நாளிலிருந்து இலுப்பைத் தோப்பினிடையிலின்று தீயடுப்பின் வெளிச்சம் தெரிவது நின்றுபோயிற்று.

மெய்யறியாமையை மேற்கொண்டிருந்த பழுவூர்க்குப்பத்து வாழ் மக்கள் விலங்கு வழக்கத்தை விட்டொழித்தனர்.

★

# "எல்லைப் பாதுகாப்பிலாக்கா என்ன செய்கிறது?"

"வடக்கிலும் வடகிழக்கிலும் இந்தியாவிற்கும் சீனாவிற்குமிடையே சுமார் 2500 மைல்கள் நீளமுள்ள எல்லை உள்ளது. அங்கிருந்து சென்ற சில வாரங்களாகத் தொடர்ந்து வந்துகொண்டிருக்கும் செய்திகளைப் பார்த்தால் இந்தியாவின் பாதுகாப்பு இலாகாவும், வெளிவிவகார இலாகாவும் சீனாவிலுள்ள நமது ஸ்தானிகராலயமும் கூடச் சென்ற இரண்டாண்டு காலமாக "விடுமுறை" எடுத்துக்கொண்டு உறங்கச் சென்றுவிட்டனவோ என்று சந்தேகிக்கவேண்டியிருக்கிறது. இந்தப் பிரத்தியட்ச நிலையை மறைப்பதில் பயனில்லை.

எல்லைகளைச் சீனக்காரர்கள் அத்துமீறி இந்திய பகுதிகளுக்குள் வருகின்றனர். இந்திய பூமிகள் சீனாவின் பிரதேசங்களாகச் சீன தேசப் படங்களில் காண்பிக்கப்படுகின்றன! என்றெல்லாம் சென்ற காலங்களில் இந்திய பார்லிமெண்டில் அங்கத்தினர்களால் சுட்டிக் காட்டப்பட்டபோது, அவை வெறும் துக்கடா விஷயங்கள் என்பது போலவே சர்க்கார் தரப்பில் பதில்கள் தரப்பட்டன. வினாக்களை எழுப்பியவர்கள் வீண்பீதி விளைவிப்பவர்கள், "இந்திய—சீன நட்புறவின்" விரோதிகள் என்பது போன்ற வகையில் கூடப் பதில்கள் அளிக்கப்பட்டதுண்டு.

ஆனால் இதுவரை இமய எல்லையில் ஏற்பட்டுள்ள அசம்பாவித நிகழ்ச்சிகளைப் பார்த்தால் கூட இந்தியாவின் பாதுகாப்பு மந்திரியும், வெளிவிவகாரத் துறையும் தமது கடமையைத் திறம்படச் செய்யத் தவறிவிட்டது அல்லது அந்த இலாக்காக்கள் தங்கள் தொழிலை அறியாத கத்துக்குட்டிகளால் நிர்வகிக்கப்படுகிறது என்று சந்தேகிக்கவேண்டியிருக்கிறது.

நமக்குத் தெரிந்தவரையுள்ள எல்லை நிலைகளை வைத்து ஆராய்ந்தால்கூடக் கடந்த பல மாதங்களாகவே எல்லை விஷயத்தில் போதிய கவனம் செலுத்தப்படவில்லை என்று கருத இடமிருக்கிறது. இந்திய பூமியில் குறைந்தபட்சம் சுமார் பத்தாயிரம் சதுர மைல்கள் விஸ்தீரணமுள்ள பிரதேசங்களைச் சீனாவின் நவீன ஆயுதப்படைகள் ஆக்கிரமித்துக்கொண்டுள்ளன. லடாக் பகுதியில் பக்கா ராணுவ ரஸ்தா அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். கிழக்கு லடாக்கில் அக்சாய்கின சின் என்ற இடத்தில் இந்திய எல்லைக்குள் சீனக்காரர்கள் விமான தளமே அமைத்துக் கொண்டிருக்கின்றனர். என்று வெகு சமீபத்தில் தெரிய வந்துள்ளது. இவை எல்லாவற்றையும் சீனக்காரர்கள் திடீரென மந்திர சக்தியால் சாதித்திருப்பார்கள் என்று பகுத்தறிவுள்ள எவரும் எண்ணமாட்டார்கள். இதை எல்லாம் சென்றபல மாதங்களில் படிப்படியாகத்தான் சீனக்காரர்கள் செய்திருக்கவேண்டும். அப்போதெல்லாம் நமது எல்லைப் பந்தோபஸ்திற்குப் பொறுப்பான பாதுகாப்பு இலாகா என்ன செய்துகொண்டிருந்தது? சீனாவிலுள்ள நமது ஸ்தானிகருக்கு இதுபற்றித் துளியளவு தகவல்கூட இதுவரை சேகரிக்க இயலாதிருந்தால், இலட்சணக் கணக்கில் பணம் செலவிட்டு அயல் நாடுகளில் ஸ்தானிகர்களை நியமிக்க வேண்டிய அவசியம்தான் என்ன?

இத்தனைக்குப் பிறகும், லடாக்கில் அக்சாய்சின் என்ற இடத்தில் இந்திய பூமியில் சீனர்கள் விமானத் தளம் அமைத்துக்கொண்டிருப்பதாக வெளிவந்துள்ள செய்திக்கு பதிலளித்த பிரதம மந்திரி, இதை ஊர்ஜிதம் செய்வதற்கான தகவல் தமக்குக் கிடைக்கவில்லை என்று கூறியிருக்கிறார். ஆனால் அதே சமயத்தில் அச்செய்தியை மறுப்பதற்குரிய தகவலும் இல்லை என்கிறார். இந்திய பூமிக்குள் அந்நியப் படைகள் அத்துமீறி நுழைந்து 17-ஆயிரம் அடி உயரமுள்ள பீடபூமியில் இராட்சதப் பிரயத்தனம் செய்து விமானத் தளம் அமைத்துக்கொண்ட செய்தி கூட உண்மையா பொய்யா என்று பாதுகாப்பு இலாகாவின் சம்பந்தப்பட்ட பிரிவு இன்னும் தகவல் கொண்டுவர இயலாவிட்டால், இமய எல்லைப்புற பாதுகாப்பில் இமயத் தவறுகளும் குறைகளும் இருப்பதாகத்தான் ஊகிக்க வேண்டியிருக்கிறது.

இதர ஒரு நாடாக இருந்தால் இத்தகைய குறைகள் ஏற்பட்டுவிட்ட இலாகாவின் நிர்வாகப் பொறுப்பிலுள்ள அமைச்சர் தாமாகவே பதவிவிட்டு விலகியிருப்பர். ஆனால் காங்கிரஸ் பார்லிமெண்டரி கட்சியின் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட மந்திரிமீது பொறுப்புள்ள காங்கிரஸ் உறுப்பினர்கள் சிலர் புகார் கூறிய போது, பிரதம மந்திரியின் மருமகனை ஒரு எம். பி. பிரஸ்தாப மந்திரியின் அலுவல்களில் குறை காண்பது பிரதம மந்திரிமீதும் மந்திரிசபைமீதும் குறை காண்பதாகும் என்று பிரச்சனையைக் குழப்பி அன்னாரை ஆதரித்திருப்பது இந்திய நாட்டின் நிர்வாக நலனுக்கு உகந்ததென்று வரவேற்பதற்கில்லை......"

"நவ இந்தியா"
20—11—59.